ISSN 2012-7286

# கொழுந்து

36

மார்ச் 2012

## சர்வதேச மகளிர் தின சிறப்பிதழ்



# இன ஒற்றுமைக்காகப் பாடும் இசைக் கோகிலம் பிரதீபா...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணியம் பேசுவோம்
கண்ணியம் பேணுவோம்

சர்வதேச மகளிர்
தினவிழா - 2012 க்கு

எமது வாழ்த்துக்கள்

# SARRITA

## Jewellery

AUTHORISED MONEY CHANGER
ARR (PVT) LTD

No. 42 Sea Street, Colombo - 11, Sri Lanka
Tel : +94 11 2435361
+94 11 2435485
Fax : +94 11 2435298

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைக்குரிய மகளிர்க்கு விருது

## திருமதி. நவம் வெள்ளச்சாமி BA.Dip.in.Edu.

கண்டியை பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்ட இவர் ஆரம்பக்கல்வியை பேராதனை தமிழ் மகா வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் பூர்த்தி செய்தார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியான இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமா பாடத்தில் அதிவிசேஷட சித்தியையும் பெற்றுள்ளார்.

உதவி ஆசிரியராக 1970 ம் ஆண்டு தனது பணியை ஆரம்பித்த இவர் பின்னர் ஆசிரிய, மாணவர்களைப் பயிற்றுவிக்கும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டார். பெருந்தோட்ட பாடசாலைகட்கு தேர்தெடுக்கப்பட்ட ஆசிரிய மாணவர்களுக்கு முழுநேரப் பொருப்பாசிரியராகவும், விரிவுரையாளராகவும் 1985- 1987 வரையில் நாவலப்பிட்டி, கண்டி ஆகிய நிலையங்களில் கடமையாற்றியுள்ளார். கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் (kandy Girle High School) 1991-2003 ஓய்வு வரையில் முதலாந்தர அதிபராக,தமிழ்ப்பிரிவின் பிரதி அதிபராக கடமை புரிந்துள்ளார்.

இவரது சமூக, சமய, கல்விப் பணியை பாராட்டி நீதி அமைச்சு அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம் செய்துள்ளது.

## கவிதாயினி வெலிகம ரிம்ஸா முகம்மத்

தென் மாகாணம், வெலிகமவைச் சேர்ந்த கவிதாயினி வெலிகம ரிம்ஸா, முகம்மத் - லரீபா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியாவார். வெலிகம அறபா தேசிய பாடசாலை மற்றும் வரக்காப்பொல பாபுல் ஹஸன் மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவியாவார். கணக்கீட்டுத் துறையில் ஆயுயுவுஇ ஆஐயுடீ ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ள இவர், தனியார் கம்பனியில் உதவிக் கணக்காளராக கடமையாற்றி வருகிறார்.

இவர் வெலிகம கவிக்குயில், வெலிகம நிலாக்குயில் என்ற புனைப் பெயர்களிலும் எழுதி வருவதுண்டு. 2004 இல் தினமுரசு பத்திரிகையில் "நிர்மூலம்" என்ற கவிதையை எழுதியதையடுத்து இதுவரை சுமார் 250க்கும் மேற்பட்ட கவிதைகளையும், 30க்கும் மேற்பட்ட நூல் விமர்சனங்களையும் எழுதியுள்ளார்.

அகில இலங்கை ரீதியாக மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தினால் 2008ம் ஆண்டு நடைபெற்ற கவிதைப் போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்றமை குறிப்பிடத்தக்கது. அல்ஹஸனாத் சஞ்சிகை நாடளாவிய ரீதியில் நடாத்திய பேனாக்கள் பேசட்டும் என்ற கவிதைப் போட்டியில் பாராட்டுப் பத்திரம் பெற்றுள்ளார்.

கணக்கீட்டுத்துறையில் நூல்களை வெளியிட்டிருக்கும் இவர், தென்றலின் வேகம் என்ற கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டிருக்கிறார்.

தற்போது BEST QUEEN FOUNDATION என்ற இலக்கிய அமைப்பின் தலைவராகவும், பூங்காவனம் காலாண்டு சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும் கடமையாற்றி வருகிறார்.

## திருமதி சூரியகலா சந்திரிகா ஜீவானந்தன்

இவர் தனது ஆரம்ப பரதக்கல்வியை கண்டி பரதக்ஷேத்திரா நாட்டியாளத்தில் கற்றார். புதுடில்லி ஸ்ரீராம் பாரதிய கலாக்ஷேத்திராவில் பரதநாட்டியத்தினை முழுநேரக் கல்வியாகக் குரு திரு. ஜஸ்டின் மக்காந்தி அவர்களிடம் ஐந்து ஆண்டுகள் கற்று பரதத்தில் சிறப்புப் பட்டம் பெற்றார்.

இவர் கல்விகற்கும் காலத்திலே மாமல்லபுரம் நாட்டிய உற்சவம், மஹா சிவராத்திரி நாட்டியாஞ்சலி உற்சவம், கொனாரக் நாட்டியோற்சவம் ஆகிய இந்திய தலைசிறந்த நாட்டிய உற்சவங்களில் பங்கேற்றுள்ளார்.

1995ம் ஆண்டு முதல் கொழும்பில் "ஸ்ரீராம் க்ஷிருக்ஷ்ட்டி" எனும் நாட்டியப் பள்ளியை நிறுவி, பல மாணர்களுக்கு நாட்டியம் கற்பித்து வருகின்றார். திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பரதநாட்டியத்தில் முதுமானி பட்டப்படிப்பையும் கற்று இறுதியாண்டு பரீட்சையை எதிர் நோக்கியிருக்கின்றார். புதுடில்லி சங்கீதத் நாடக அகாடமியிலும், சென்னை காலஞ்சென்றார் பேராசிரியர் ரி. பார்த்தசாரதி அவர்களிடமும் பரதநாட்டியத்தில் பல ஆராய்ச்சிகளையும் மேற் கொண்டுள்ளார். இதுவரை "ஸ்ரீ ராம் க்ஷிருக்ஷ்ட்டி" நாட்டியாலயத்தில் பல மாணவர்களுக்கு அரங்கேற்றமும் செய்துள்ளார்.

## மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து

## சிறந்த துடுப்பாட்ட வீராங்கனை

மீன்பாடும்தேன் நாடாம் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து இவ்வருடம் பெண் ஒருவர் சியெட் விருதுக்கு சொந்தகாரராகியிருந்தமை அந்த மண்ணுக்கு பெருமையாகும்.

கண்டி இளையோர் கிரிகட் கழகத்திற்காக இரண்டாம் பிரிவு மகளிர்க்கான மட்டுப்படத்தப்பட்ட 25 ஓவர் கிரிக்கட் போட்டியில் விளையாடிய மிருனாளினி சிதம்பரநாதன் என்பவர் அதி சிறந்த துடுப்பாட்ட வீராங்கனைக்கான விருதை வென்றெடுத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பெண் ஒருவர் கிரிக்கட் விளையாட்டில் விருதுபெற்றிருப்பது இதுவே முதல் தடைவையாகும்.

நான்கு போட்டிகளில் 68.33 சராசரி பெறுமதியுடன் மொத்தமாக 205 ஓட்டங்களை பெற்றதால் சுற்றுப் போட்டியில் அதிசிறந்த துடுப்பாட்ட வீராங்கனை விருதை மிருனாளினி வென்றெடுத்தார்.

குருநாகலில் நடைபெற்றடேப் போல் கிரிக்கட் சுற்றுப் போட்டியில் சம்பியனான வடக்கு கிழக்கு மாகாண அணிக்கு மிருனாளினி தலைவியாக விளையாடியபோது சுற்றுப் போட்டியின் அதி சிறந்த வீராங்கனையாக தெரிவாகியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN : 2012-7298

# கொழுந்து 36

ஆசிரியர் - அந்தனி ஜீவா
57, மகிந்த பிளேஸ், கொழும்பு 06, இலங்கை.
0775612315, kolundu@gmail.com



## பெண்களும் உரிமைகளும்

பெண்கள் வாக்குரிமையை போரா டியே பெற்றார்கள் என்பதை நமக்கு வரலாறு எடுத்து கூறுகின்றது. ஆனாலு இலங்கை பெண்மணிகள் கூட போராடியே வாக்குரிமையை பெற்று ள்ளார்கள்.

பெண்கள் வாக்குரிமை சங்கம் 1928 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. வாக்குரிமை சங்கத்தில் மேலாட்டி அம்மையார், டாக்டர் நல்லம்மா திருமதி ஆர் தம்பிமுத்து ஆகிய தமிழ் பெண்மணிகள் அங்கம் வகித் துள்ளனர்.

பெண்களின் வாக்குரிமையை எதிர் த்த தேசிய வீரரான பொன். இராமநாதனுக்கு எதிராக டொன மூர் கமிஷனிடம் பெண்கள் வாக்கு ரிமை சங்கம் சாட்சியம் அளித் துள்ளது.

[illegible] கோ. நடேசய்யர் பெரி யார் பெரியசுந்தரம் ஆகியோர் பெண் களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டும் என்று வாதிட்டவர்கள்

பெண்கள் தங்கள் உரிமைகளை போராடித்தான் வென்றெடுத்தார்கள்

விலை
50 ரூபாய்

# மகளிர் தினம்



மானிடரில்(ல்) பெண்களில் [ல்]
பொறுக்கும் பொறுமைக்கும்
வேர் போன்ற வழக்கங்கள்
சம்பிரதாய சடங்குகள்
அப்பப்பா......
மண்ணைப் போல.....
பெண்ணைப் போல்......
பொறுமையாய் மிக்க பொறுமையாய்
மங்கையராய் பிறந்திட்ட
எங்களுக்கு.....
எல்லையுமில்லாத பொறுமை
சிலவேளை...
மதியில்லாப் பொறுமை

மகளிரின் சிறந்த விழுமியங்களாய்
மருகி செழு கொழுநனாகி
மனம் பதிய...... வம்
மனம்|வ|த்தில் விழுந்து
கவிதைகள் தினமும் பெறும்
மனங்களான சிரங்களை விதைக்கிறது

பெண்களின் பெருமை
பெரிதாய்ப் போற்றப்படுவதை
தூற்றவும் படுகின்றது
பெண்ணுரிமை கேட்கப்படுவதை
ஆணாதிக்கம் ஆட்சி செய்ய
பெருமைக் கொள்ளும்
பெருமைக் கொள்ளும் கம்
போதையரின்.......
பெண்ணாதிக்கமும்
பெண்ணாய்ப் பிறந்திட்ட என்னை
வேதனிக்க வைக்கிறது..... நான்
வருத்திக்கவும் வைக்கிறது.

ஆணாதிக்க அடக்குமுறை
உலகமெல்லாம்.....
பெருமைப் பேசும்
பெண்ணாதிக்கமும்
பெண்ணுரிமையும்......

சமத்துவத்தைப் பேச
சத்தியம் செய்ய வேண்டும்
சந்ததியாய்.....

பெண்களின் பார்வை ஒரு
பொன்வேளை, வ! அறுக்கும் போது
ஆணாதிக்கம் ஏன்
அனியாய நுழைகிறது?
கிள்ளித்தானே கொடுக்கப்படுகிறது
கிழிக்கிறதும் பார்க்காத
கிளர்ச்சசி உலகம்

மகளிர் தினமொன்றும்
மாற்றம் கொண்டு வரப்போவதில்லை
மனதிலுள்ள கனவுகள் மாறாது வரை.
மனதிலுள்ள கனவுகள் நின்றாய் சேருதுவரை
சர்வதேச மகளிர் தினம்
சட்டை அடியாய்...... சாதிக்காதவரை

நல்லையா சந்திரசேகரன்
அரசிநாடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைத்துறையில் ஓர் சாதனை மாது


வி. ரி. இளங்கோவன் (பிரான்ஸ்)

பாடசாலைக் காலத்திலிருந்தே மூத்த சகோதரர்களைப் பின்பற்றி கலை, இலக்கிய, அரசியல்துறைகளில் யான் ஈர்ப்புக் கொண்டவனானேன். அக்காலத்திலே யானும் மேடையேறத் தொடங்கினேன். அறுபதுகளின் முற்பகுதியிலிருந்தே பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், அரசியல் பிரமுகர்களோடு பழகும் வாய்ப்புகள் ஏற்பட்டன.

அன்று சிறந்த பெண் பேச்சாளர்களாக வடபகுதியில் பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், பண்டிதை பொன் பாக்கியம், பண்டிதை நாகம்மா அப்பாக்குட்டி, புலவர் செல்வநாயகி, வேதவல்லி கந்தையா, உருத்திரா நந்தசாமி ஆகியோர் விளங்கினர். இவர்களது பேச்சுக்களைக் கேட்கவும், இவர்களை சிலரோடு மேடையேறும் சந்தர்ப்பமும் அன்றே எனக்கு வாய்த்தது. அந்த காலம் முதல் இன்றுவரை எழுத்துத்துறையில் ஆளுமைகள், யாழ்நங்கை அன்னலட்சுமி இராஜதுரை, புதுமைப் பிரியை பத்மா சோமகாந்தன், ந. பாலேஸ்வரி, சிதம்பரபத்தினி, குந்தவை, சடாட்சரதேவி, பவானி ஆழ்வாப்பிள்ளை, ரூபராணி யோசேப், இராஜம் புஸ்பவனம், தமிழ்ப்பிரியா, யோகா பாலச்சந்திரன், அருண் விஜயராணி, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், மண்டைதீவு கலைச்செல்வி, கோகிலா மகேந்திரன், கௌசல்யா, மண்டூர் அசோகா, சிவமலர் செல்லத்துரை, தாமரைச் செல்வி, ஆதிலட்சுமி இராசதுரை, நயீமா சித்திக், சந்திரா தியாகராசா, சந்திரா தனபாலசிங்கம், யோகேஸ்வரி சிவப்பிரகாசம், சிவயோகமலர் ஜெயக்குமார், ஆனந்தி, கவிதா, கெக்கிராவ ஸஹானா, ராணி சீதரன் ஆகியோருட்பட பல பெண் எழுத்தாளர்களை அறிந்திருக்கிறேன்.

அவர்களில் ஒரு மூத்த பெண் படைப்பாளி பத்திரிகைத்துறையில் அரை நூற்றாண்டு மேலாகத் தொடர்ந்து பணியாற்றி வருவது உண்மையில் மெச்சத்தக்க சாதனையாகும். ஆமாம் அவர் தான் யாழ்நங்கை என்ற பெயரில் அன்றுதொட்டு பல படைப்புகளைத் தரும் மூத்த பெண் படைப்பாளி அன்னலட்சுமி இராஜதுரை.

இன்று எத்தனையோ இளம்பெண்கள் சிறந்த படைப்பாளிகளாக, பத்திரிகையாளர்களாக விளங்குகிறார்கள். சர்ச்சைக்குரிய விடயங்களையும் துணிச்சலோடு எழுதுகிறார்கள். பெண்ணியம் பேசுகிறார்கள். ஆனால் அன்று ஒரு இளம்பெண் படைப்பாளியாக விளங்கியதோடு, துணிச்சலோடு பத்திரிகைத்துறையைத் தானாக விரும்பி ஏற்றுக் கொண்டு பணிபுரிய முன்வந்தமை முற்போக்கானதும் பாராட்டுக்குரியதுமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1959ஆம் ஆண்டு "கலைச்செல்வி"" சஞ்சிகை இவரை இளம் எழுத்தாளர் என அறிமுகப்படுத்தியது. 1962ம் ஆண்டு முதல் வீரகேசரி பத்திரிகை நிறுவனத்தில் உதவி ஆசிரியராகப் பணியை ஆரம்பித்தார். பத்திரிகை த்துறை, ஆங்கிலம் ஆகியவற்றில் டிப்ளோமா தேர்ச்சிச் சான்றிதழ்கள் பெற்றுக கொண்டவர். ஓவியத்து றையிலும் ஆசிரியர் தரராதரப் பத்திரம் பெற்றுக் கொண்டவரென அறிய முடிகிறது.

சிறுகதை, கட்டுரை, கவிதை, நாவல், விமர்சனம் என எழுத்துத்துறையில் தடம்பதித்தார். கலைச்செல்வி, சிரித்திரன், வீரகேசரி மற்றும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்து எழுதிவந்தார். இலங்கை வானொலி மகளிர் நிகழ்ச்சிகளைத் தயாரித்தளித்தார். அவ்வப்போது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு சிறப்பித்து வருகிறார்.

நெருப்பு வெளிச்சம் (சிறுகதைத் தொகுதி), உள்ளத்தின் கதவுகள் (நாவல்), விழிச்சுடர் (குறுநாவல்) இருபக்கங்கள் (கவிதைத்தொகுதி) என்பன இவரது படைப்புகளாகும்.

மணிலா, பீஜிங் நகரங்களில் நடை-பெற்ற மாநாடுகளில் கலந்துகொண்ட அனுபவங்களை வீரகேசரி வாரவெளியீட்டில் தொடராகப் பல வாரங்கள் எழுதிப் பாராட்டுப் பெற்றார். இவரது பணிகளைப் பாராட்டி இந்துக் கலாசார அமைச்சு 1992ஆம் ஆண்டு "தமிழ்மணி" விருது வழங்கிக் கௌரவித்தது.

சிறந்த பத்திரிகையாளருக்கான விருதை 1993ஆம் ஆண்டு எஸ்மண்ட் விக்கிரமசிங்க அறக்கட்டளை, அன்றைய ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க மூலம் இவருக்கு வழங்கிக் கௌரவித்தது.

கொழும்பு தமிழ் இளைஞர் கலாசாரக் கூட்டமைப்பு, தென்கிழக்கு ஆய்வு மையம், கொழும்பு கலைச்சங்கம் என்பனவும் இவரது பணிகளைப் பாராட்டிக் கௌரவித்துள்ளன. மலலிகை சஞ்சிகை அட்டையில் இவரது படத்தைப் பிரசுரித்து, இலக்கிய வரலாற்றில் பெருமை சேர்த்தது.

இலங்கை எங்கும் நடைபெறும் பல்வேறு மகளிர் நிகழ்ச்சிகள், இலக்கியக் கருத்தரங்குகள், உரையரங்குகள், இலக்கியப் பயிற்சிப் பட்டறைகள், கலந்துரையாடல்கள் யாவற்றிலும் கலந்து கொண்டு சிறப்பித்து வருகின்றார்.

சிறுகதை, கட்டுரை, கவிதை, நாவல், விமர்சனம், மொழிபெயர்ப்பு, பத்திரிகைத்துறை என அனைத்திலும் சிறப்புற்று விளங்கும் இவருக்குக் கணவர் திரு. இராஜதுரை உறுதுணையாக என்றும் உதவிவருவது முன்மாதியானதாகும்.

கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே வீரகேசரி நிருபராக நியமனம் பெற்ற யான், அன்று வீரகேசரி நிருபர்களுக்கான கருத்தரங்கு ஒன்றுகூடலுக்கென அங்கு செல்லும் போதெல்லாம் இவரைப் பார்த்திருக்கிறேன் பேசியிருக்கிறேன். இலக்கியக் கூட்டங்களிலும், வானொலியிலும் அவரது குரலைக் கேட்டுள்ளேன்.

பத்திரிகை அலுவலகத்தில் மிக அமைதியாகத் தனது பணியில் மூழ்கியிருப்பார். கதைத்தால் புன்முறுவலோடு ஓரிரு வார்த்தைகளில் பதில் சொல்வார்.

தற்போது, வீரகேசரி நிறுவனம் வெளியிடும் "கலைக்கேசரி" சஞ்சிகையின் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றுகிறார். கலைக்கேசரியைத் தொடர்ந்து பெற்று வருகிறேன். வடிவமைப்பிலும், விடயதானங்களின் உள்ளடக்கத்திலும் கனதியான, அழகான சஞ்சிகையாகக், கலாசாரப் பண்பாட்டு, ஆய்வு இதழாக கலைக்கேசரி வெளிவந்து இவரது ஆளுமையை வெளிப்படுத்துகிறது. தமிழகத்திங்கூட இத்தகைய இதழ் வெளிவருவதில்லை.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில், பல வருடங்களுக்குப் பின் இவரைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்தேன். "சிற்றிதழ்கள்" அரங்கில் கட்டுரை சமர்ப்பித்துப் பேசுவதற்காக இருந்தேன். ஆரம்பமாக ஒரு நிமிடங்க ளேயிருந்தன. முன்வரிசையில் இவர் அமர்ந்திருந்தார். அருகில் சென்று வணக்கம் சொன்னேன்.

"இளங்கோவன் எப்படி? பிரான்ஸ் நாட்டில் இருக்கிறாய்... இல்லையா? முன்னர் மெல்லிய ஆளாக... அழகாக... இருந்தாய்... இப்ப... என்ன... இப்படி?..." என்றார்.

"வெளிநாட்டுச் சுவாத்தியம்... வயதும் அறுபதாகிது.." என்றேன்.

"அப்படியா..." புன்னகைத்தார். "நல் லாயி..." என்று தாயுள்ளத்தோடு வாழ்த் தினார். மனது குளிர்ந்தது. அப்பால் நகர்ந்து மேடைக்குச் சென்றேன்.

சிறந்த பெண் படைப்பாளியாகப், பத்திரிகையாளராகப் பல்லாண்டுகள் பணிபுரிந்து சாதனை படைத்துவரும், பெண்ணினத்துக்குப் பெருமை சேர்க் கும் அந்தத் தாய் அன்னலட்சுமி இராஜ துரை மேலும் பல்லாண்டுகள் ஆரோக் கியத்துடன் வாழ்த்து பணி புரியப் புலம்பெயர்ந்து வாழும் நாமும் வாழ்த்து வோமாக...!

---

# மாதர் உரிமைகளுக்காக உழைத்த வேதவல்லி கந்தையா

*வீ. சின்னதம்பி*

திருமதி வேதவல்லி கந்தையா வட்டுக்கோட்டையில் (1920 - 1988) பிறந்தவர். நீர்வேலியில் எஸ்.கே. கந்தையா எனும் பொதுவுடைமை வாதியான ஆசிரியரைத் திருமணம் புரிந்தவர். ஆசிரியர் கந்தையா தான் முதன் முதலில் இலங்கையில் "கம்யூனிஸ்ட் அறிக்கை"யை தமிழாக்கம் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமதி வேதவல்லி ஆண்களுக்கு உள்ள உரிமைகள் பெண்களுக்கும் இருக்க வேண்டும் என்ற ஜனநாயகக் கோட்பாட்டுக் கமையப் பல மாதங்களை ஒன்று திரட்டி முற்போக்கு மாதர் சங்கத்தை உருவாக்கி யாழ்ப்பாணத்து மாதர் மத்தியில் மறுமலர்ச்சியை ஏற்படுத் தினார். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் உறுப்பினராக இருந்தார்.

திருமதி வேதவல்லி சாதி ஒழிப்புப் பிரசாரங்களில் முன்னின்று செயற்பட்டார். கூட்டுறவு இயக்கப் பணிகளிலும் ஊக்கத்துடன் ஈடுபட் டார். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வல்லு நரான திருமதி வேதவல்லி பேரினவாதத்தின் அபாயத்தை நாடறியக் கூறிவந்தார்.

திருமதி வேதவல்லி நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் தமது ஆசிரியர் சேவையைத் தொடங்கி கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியில் அதிபராகத் தமது சேவையைப் பூர்த்தி செய்தார்.

யாழ். மாவட்ட கம்யூனிஸ்ட் மகளிர் அமைப்பு, யாழ். மாவட்ட மகளிர் குழு, யாழ். மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசம், வலி. கிழக்குப் பகுதி மகளிர் குழுக்கள், நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகம், நீர்வேலி ஸ்ரீமுருகன் மாதர் ஐக்கிய நாணய சங்கம் போன்ற பலரக அமைப்புகளின் தலைவராகவும், போஷகராகவும் பணியாற்றி திருமதி வேதவல்லி மக்களுக்குத் தொண்டாற்றினார். அவர் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் தலைவர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார்.

முதலாளித்துவ சமுதாய அமைப்பை அழித்தொழித்து புதியதோர் பொதுவுடமைச் சமுதாயத்தை அமைத்தால் தான் பெண்களும் மற்றும் மக்களும் சம உரிமையுடன் வாழலாம் என்று திருமதி வேதவல்லி திடமாக நம்பி அதற்காக உழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழிப்புணர்வில் மலையக பெண்கள்

சந்திரகாந்தா முருகானந்தன்

பெண்ணியம் சார்ந்த விழிப்புணர்வில் அதல பாதாளத்தில் இருந்த மலையக பெருந்தோட்ட தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த இளைய தலைமுறையினரிடையே அண்மைக்காலமாக தமது நிலை பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டு வருகின்றமை மகிழ்ச்சிக்குரியது. கோதை நாயகி அம்மாள் காலத்திலேயே இவ்விழிப்புணர்வு முடுக்கிவிடப்பட்ட போதிலும் அது தொடராமல் போய்விட்டது அல்லது மந்தகதியிலேயே பரவலடைந்தது எனலாம். கடந்த நூற்றாண்டின் பிற்பாதியிலே எழுத்திலே மேலோங்கிய பெண்ணியச் சிந்தனைகள் மலையகத் தோட்டங்களை எட்டாமலிருந்ததை மறுப்பதற்கில்லை.

கடந்த சில வருடங்களாக நாட்டில் இதரபகுதிப் பெண்கள், சமூக, பொருளாதார, அரசியல் விடுதலை பெற்று வந்த காலகட்டத்தில் மலையகத்தின் தோட்டப் புறங்களில் இந்நிலைமை ஏற்படாமைக்கு காரணம், மலையக மக்களுக்கு போதிய கல்வி வசதி வாய்ப்பின்மையே ஆகும். தற்போது சிறு மாற்றங்களை அவதானிக்கின்ற போதிலும், இன்னும் பல பெண்கள் தனது தாழ்வான நிலை பற்றிய விழிப்புணர்வு பெறாமலேயே இருக்கின்றனர். பெண்ணியம், பெண்ணுரிமை, பெண் விடுதலை, பால் சமத்துவம் என்பன பற்றி அதிகம் அறிந்து கொள்ளாதவர்களாக மலையில் வேலை, குடும்பம், கணவன், குழந்தைகள் என்ற குறுகிய வட்டத்தை தாண்டி வெளியே வராதவர்களாகவே இருந்தனர். ஒட்டு மொத்த பெருந்தோட்ட தொழிலாளர் வர்க்கமே பால்பேதமின்றி அந்நியர் ஆட்சிக்காலம் தொட்டு சுதந்திரத்திற்குப் பின்னரும் கூட அடிமைப்பட்டிருந்தமையினாலோ என்னவோ பெண்ணியம் பற்றிய சிந்தனைகள் மேலோங்காதிருந்தது எனலாம். மலையக தொழிலாளர் போராடியதெல்லாம் தமது அடக்குமுறைக்கு எதிராகத்தான்.

மலையக பெருந்தோட்டப்புற மக்களின் கல்வியை திட்டமிட்டு கீழ்நிலையில் வைத்திருந்தமைக்குக் காரணமே அவர்கள் விழிப்புணர்வு பெற்று விடக்கூடாது என்பதற்காகத்தான். இல்லாவிட்டால் இவ்வளவு அற்ப கூலிக்கு கடின உழைப்பை வாங்கிட முடியாமல் போய்விடும் என்ற நப்பாசை தான்.
மலையக மக்களின் சம்பள அதிகரிப்பை வேண்டி போராடிய பிரதான தொழிற்சங்கங்கூட இது விடயங்களில் ஆரம்பத்தில் அதிக அக்கறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தவில்லை. கால ஓட்டத்தில் மேலும் சில தொழிற்சங்கங்கள் உருவானபோது மலையக மக்களின் இதர விடயங்களுக்குமான போராட்டங்கள் மும்மரமாகின. பிரதான தொழிற்சங்கம் உட்பட அனைத்து தொழிற்சங்கங்களும், பெருந்தோட்டத்துறையினரின் வாக்குரிமை, பிரஜாவுரிமை முதலானவை பறித்தெடுக்கப்பட்டபோதே விழித்துக் கொண்டன. நிலவுரிமை, கல்வி முதலான சிந்தனைகளும் துளிர்த்தெழுந்தன. எனினும் முதலாளி வர்க்கம் தொழிற்சங்கங்களிடையே முரண்பாட்டை ஏற்படுத்தி பிரித்தாளும் தந்திரத்தை மேற்கொண்டது. இன்று மலையக மக்களின் சில உரிமைகள் வென்றெடுக்கப்பட்டு அவர்கள் அரசியலில் மீண்டும் ஆதிக்கம் செலுத்தும் இன்றைய காலகட்டத்திலும் கூட பேரினவாதம் மலையக மக்களைப் பிரித்தாளும் விடயங்களை மேற்கொள்கின்றது. எது எப்படியோ மலையக மக்களின் அரசியல் பலத்தின் மூலம் அவர்களது கல்வியில் சிறிது மேம்பாடு ஏற்பட்டது. கைநாட்டு போட்டு சம்பளம் வாங்கிய நிலையிலும் மாற்றம் ஏற்பட்டது.

இன்றைய புதிய தலைமுறை மலையகப் பெண்கள் கல்வியில் ஆர்வம் கொண்டு படித்து முன்னேறி, தடைகளைத்தாண்டி வெளியுலகுக்கு வரத்துடிக்கின்ற ஆரோக்கியமான மாறுதலை தரிசிக்கின்றோம். நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு உள்ள கல்வி வாய்ப்பு வசதிகள் மலையகத்தில் இன்றுகூட இல்லாதிருக்கிறது. ஆரம்பக் கல்விக்குப் பின்னர் இடைநிலைக் கல்வி பெறுவதற்குக்கூட பல மைல் பயணம் செய்ய வேண்டி உள்ளது. போக்குவரத்து வசதிகளும் குறைவு. பயணிப்பதிலுள்ள பாதுகாப்புணர்வும் மலையக மாணவிகளுக்கு இடிவாளம் இடுகின்றது. இன்னொரு புறம் மலையக மக்களின் குடும்ப பொருளாதார நிலை மிகவும் தாழ்ந்த நிலையிலேயே இருப்பதனால் பாடசாலை இடைவிலகல் அதிகமாகவே உள்ளது. இதனால் பெண் கல்வி மிகவும் பின்தங்கியேயுள்ளது. சிறுவயதிலேயே தலை நகருக்கு வீட்டு வேலைக்கார சிறுமிகளாக செல்வதும் கல்விக்கு தடைபோடுகிறது.

உலக நீரோட்டத்தோடு மலையகப் பெண்களும் முன்னேறவேண்டியதன் அவசியம் அண்மைக்காலமாக உணரப்பட்டு வருகிறது. இவற்றிற்காக உழைக்கும் நிறுவனங்களின் செயற்பாடுகள் போதுமானதாக இல்லை. அடிமட்ட மக்களை இவர்கள் நெருங்கி வந்து செயற்படவேண்டும்.

மலையகத்து ஆணாதிக்க சமுதாயமும் பிறரைப் போலவே பெண்களை தமது கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்திருக்க விரும்புவதில் ஆச்சரியமில்லை. எனினும் புதுயுகப் பெண்கள் இதற்கு தயாராக இல்லை. தமது சமத்துவம் பற்றி சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். இவர்களது ஆற்றல் பல்வேறு துறைகளில் பெருகவும், விருத்தியடையவும் பெண்ணிய அமைப்புகள் வழிகாட்ட வேண்டும்.
மலையகத்தைப் பொறுத்தவரை பெண்கள் மிகக்கடினமாக உழைக்கிறார்கள். அற்ப கூலிக்காக மலையிலும், எதுவித கூலியுமின்றி வீட்டிலும் அயராது உழைக்கின்றார்கள். கணவனைவிட அதிகம் உழைப்பவள் மனைவியாக இருக்கின்ற போதிலும் தீர்மானங்களை எடுப்பவன் கணவனாகவும், அதை நிறைவேற்றுபவள் மனைவியாகவுமே இருக்கிறார்கள். பல குடும்பங்களில் மனைவியின் விருப்போ ஆலோசனையோ கவனத்திற்கு எடுக்கப்படுவதில்லை.

குடும்பப் பிரச்சினைகளுக்கு அப்பால் மலையகப் பெண்கள் எதிர்கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளை இருவகையாகப் பார்க்கலாம். முதலாவது தொழில்ரீதியானது, மற்றது கலாசாரரீதியானது. குறைவான ஊதியம், மேற்பார்வையாளர்களின் அடக்குமுறை, பாலியல் வன்முறைகள் என்பன இவற்றுள் அடங்கும். இவற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள இவர்கள் எவ்வளவோ போராட வேண்டியுள்ளது.

இன்று சில பெண்கள் படித்து அரச வேலைவாய்ப்பு பெறும் நிலையைக் காணமுடிகிறது. சிதைவடைந்த நிலையிலிருந்த தமது குடும்பங்களை இவர்கள் நிமிர வைப்பதை காணமுடிகிறது. இவ்வாறு படித்து முன்னேறிய பெண்கள் தமது அடுத்த தலைமுறையினருக்கு முன்னுதாரணமாக திகழுவதுடன், அவர்களை வழி நடத்தவும் செய்கிறார்கள். பெண்ணியப் புரிதலுடன் பெண்ணிய மேம்பாட்டிற்கான செயற்பாடுகளிலும் ஈடுபடுகிறார்கள். கலை இலக்கியத் துறைகளிலும் இன்று மலையகப் பெண்கள் கணிசமான முன்னேற்றத்தை எட்டியுள்ளனர்.

இவ்வாறு மலையகப் பெண்கள் முன்னைய பெண்கள் போல் அடிமைப்பட்டு, கொடுமைகளைத் தாங்கிக்கொண்டு வாழத் தயாராக இல்லை. சர்வதேச அளவிலும், தேசிய மட்டத்திலும் உள்ள பெண்களைப் போலவே, மலையகப் பெண்களும் சமத்துவமான பயணத்தை நோக்கி அடியெடுத்து வைத்து விட்டனர்.

---

## அன்புத் தேவதை
## பிலோமினம்மா

வீ. சின்னத்தம்பி

[illegible]

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக் கோபுரத்தின் ராஜமணி குமாரி ராஜம்

கலைஞர் கலைச்செல்வன்

ஒரு காலத்தில் தமிழகத்திலும், ஏன் ஷேக்ஸ்பியர் நாடகங்களில் கூட ஆண்களே பெண் வேடமிட்டு நடித்தனர். காலப்போக்கில் பெண் பாத்திரங்களில் பெண்களே நடிக்கலானார்கள்.

அதே போன்று நமது நாட்டிலும் பெண்கள் மேடையேறி நடிக்க முன்வராத காலமொன்று இருந்தது. கலையரசு சொர்ணலிங்கம் அவர்களது நாடகங்களிலும், பெண் வேடமேற்றவர்கள் ஆண்கள்தான்.

இலங்கை தமிழ் நாடக வரலாற்றில் முதன் முதலில் பெண்களை நாடகங்களில் நடிக்க வைத்த பெருமை நாடகத்தந்தை கே. பி. ஏ. இராஜேந்திரம் மாஸ்டரையே சாரும். 1942 இல் மாஸ்டர் அரங்கேற்றிய "மிஸ் மல்லிகா", "லீலா சுந்தர்" ஆகிய இரு நாடகங்களின் மூலமே "ஸ்கிரிபாட்" வேடங்களில் கதாநாயகியாக நடிப்பதற்கு அடியெடுத்து வைத்தனர். அதிலொரு விசேஷம் நடிப்பதற்கு முதலடியெடுத்து வைத்த இந்த வெள்ளணிகள் தமிழ் பெண்கள் அல்லர். இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்த மலாய் சமூகத்தவர்கள்.

நாடக மேடையில் புதுமைப் புரட்சிகளை விளைத்தவர்களும், பரீட்சார்த்த நாடகங்களைத் தயாரித்தவர்களும், அயல்நாட்டு ஆங்கில நாடகங்களை மொழிபெயர்ப்பாளர்களாகவும், தழுவலாளர்களாகவும் தமிழுக்குத் தந்தவர்கள் தலைநகர் கலைஞர்கள் என்பது ஈழத்தமிழ் நாடக வரலாற்றில் பதிவாகியது. அதேபோல் முஸ்லிம், தமிழ்ப் பெண்களை நாடகங்களில் துணிந்து நடிக்கச் செய்தமை, தலைநகர் நாடக வரலாற்றிற்கு மட்டுமே உரிய தனிப் பெரும் முத்திரையாகும்.

மலாய் பெண்கள் நாடகமேடைகளில் பதித்த தடங்கள் தான் தமிழ்ப் பெண்களின் வருகைக்கு அடித்தளமானது. மலாய் சமூகத்தைச் சார்ந்த நடிகைகள் நாடக அரங்கின் நன்றிக்குரியவர்கள். இந்நடிகைகளில் பிரசித்தமான சிலரைக் குறிப்பிடுவது அவர்களை நினைத்துப் பார்ப்பது சர்வதேச மகளிர் தினத்திற்கு சிறப்புச் சேர்ப்பதாகும்.

தாமரைச்செல்வி (புனைபெயர்), சுந்தரி ஃபாத்திமா, மர்லியா, பாடகர் பேபி ஹாஷிமின் உடன்பிறப்பான கிருஷ்ண குமாரி (புனைப்பெயர்) புஷ்பா குமாரி (சித்திரலேகா), நூர்யா குமாரி (நூர்ஜஹான்) ஆகிய சகோதரிகள்

இராஜேந்திரம் மாஸ்டரினால் அரங்கிற்கு அறிமுகமானவர்கள். காலஞ்சென்ற ஜே. பி. ரொபர்ட்டுடன்

கண்டுபிடிப்புக்கள் ஜெய் ரஹீம் சஹீத் (ஜுமைரத்) நூலினா ஆகியோர்கள். சிலோமியாக அறிமுகமாகி தமிழ் நாடக அரங்கில் கவர்ச்சித் தாரகையாக ஜொலித்தவர் சந்திரகலா எனும் சித்திப்பரீதா. இவர் நடிகவேள் லடீஸ் வீரமணியின் அறிமுகம்.

குணாளன் எம். ஏ. சி. ஹாஜா மொஹிதீன் தமிழ் மேடைக்கு தந்த இரு நடிகைகள்தான் ரெஜினா ரஹீம், பிரேமா (புனைப்பெயர்) ஆகியோர். சிங்கள சினிமாவில் பிரபலமாகியிருந்த ஷீலாலையை "ஒரு மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு உலகம்" நாடகத்தின் மூலம் தமிழ் நாடக மேடைக்கு அழைத்து வந்தவர் அமரர். எம்.ஜி. டீன்குமார். பல ஆண்டுகள் நாடகங்களில் தொடர்ந்து நடித்த இவர்களின் பங்களிப்புகள் ஆராதனைக்குரியவை.

இவாகளது காலத்திலேயே இவர்களு டனேயே, தமிழ் கலைத்துறையில் பாதம் பதித்த தமிழ்ப் பெண் நடிகைள் பட்டாளமே உண்டு. இவர்களில் பெரும்பாலானோருக்கு இராஜேந்திர மாஸ்டரின் "மனோரஞ்சித கானசபா" வே குருகுலமாகும். கலாராணி, நேச ராணி, பன்முக ஆற்றல் கொண்ட ஆர். மணிமேகலை, காந்தக் கண்களைக் கொண்ட முத்துலக்ஷ்மி ருத்ராணி மஞ்சுளா தேவி, ஆர் மகேஸ்வரி, ஹெலன் குமாரி, சக்ஷிகலா போன்றோர் மாஸ்டரின் ஆஸ்தான நடிகைகள்.

எழுத்தாளன் காதலி நாடகத்தின் மூலம், ஜோன் சாமிதாசன் அறிமுகப்படு த்தியவர், அப்புக்குட்டி ஜெயகௌரி. அவரது சகோதரிகள் ஏ. ரட்ணபிரபா, பிரியா ஜெயந்தி. இவர்கள் மலையாளி கள். தேவன் அழகக்கோனின் "முல் லைக் குமரி" நாடத்தின் மூலம் பிரப லமானவர் குமாரிராஜம் எனும் ஆர். ராஜமணி, செல்வம் பெர்ணான்டோ, மல்லிகா கீர்த்தி பத்மா குகபாலன், நாடக நடிகையாக இருந்து வானொலி யில் புகழீட்டிய ராஜேஸ்வரி சண்முகம், ஆமீனாபேகம், சுப்புலட்சுமி காசிநாதன், விஜயாள் பீற்றர், பிலோமினா சொல மன், விஜயாம்பிகை, ஜெகசோதி இவர்களைத் தொடர்ந்து மணலி மகேசுஷ்வரி, விஜயலக்ஷ்மி, இந்திராதே விபிள்ளை, ஆனந்தராணி, ரோஹினி டீன்குமாா, எம். சரோஜா, கமலஸ்ரீ, லீலா ரஞ்சனி, சந்தானலெட்சுமி, மேரிலீலா, சாரதா, ரத்னகலா அந்தனி ஜீவாவின் "பறவைகள்" மூலம் அறிமுகமான, ஜெயா, தேவகுமாரி ஈஸ்வரி மற்றும் கனகாம்பாள், ரஞ்சனி, ஜெயதேவி, ஸ்ரீதேவி, மஹேஸ்வரி, செல்வராணி, எச். யூ. தாஹிரா, வசந்தி பி. ஏ, ஒருமலர் ராஜம், ராணிகான், வேலங்கி செல்வ ராஜா, சசிகலா, ரோஹினிதேவி, ஸ்ரீ ரஞ்சனி ஆகியோருடன் அண்மைக்கால வரவுகளான சர்மிளாதேவி, ராஜஸ்ரீ, ரஞ்சனி ராஜமோகன், சாந்தி பானுக்ஷா, வாணிஸ்ரீ ஆகியோர் குறிப்பிடத்த க்கவர்கள். (இன்னும் சிலர் விடுபட்டு போயிருக்கலாம். இதை எழுதும் போது என் நினைவுக்கு வந்தவஉகளே இவர்கள்.) தலைநகர் பெண் கலை ஞர்களான இவர்கள் ஈழம் முழுவது முள்ள அரங்குகளை அலங்கரித்தவர்க ளாவார்கள்.

நடிப்புக்கலைக்கு தங்களையே அர்ப ணித்துள்ள இந்நடிகைகளில் பலர் நான் இயக்கிய நாடகங்களில் நடித்திருந் தாலும் குமாரிராஜத்திடம் ஒரு பாத்தி ரத்தைக் கொடுத்து அவர் நடிப்பதை பார்த்துக்கொண்டிருப்பதே ஒரு சுகா னுபவம்.

ஒரு இயக்குனரின் எதிர்பார்ப்பை புரிந்து கொண்டு பாத்திர வார்ப்பிலிருந்து சற் றேனும் வழுவாது தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியவர் குமாரிராஜம்.

நான் இயக்கிய "மரணத்தின் மடியிலே", "நளாயினி", "இரு துருங்கள்", "மனித தர்மம்", "சிறுக்கியும் பொறுக்கியும்" போன்ற நாடகங்களில் மாறுபட்ட வேடங்களில் நடித்து, தனது தனித்து வமான நடிப்பை வெளிப்படுத்தி தனக் கென ஓர் இடத்தை தக்கவைத்துக் கொண்டவர் இவர்.

தினகரன் தமிழ் நாடகவிழா - 1969 இல் "மனித தர்மம்" நாடகத்தில் தனது அபரி மிதமான திறமையை அடையாளப்ப டுத்தி சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றவர். தினகரன் நாடகவிழாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசளிப்பு வைபவம் இராமகிருஸ்ண மிஷன் மண்டபத்தில் நடை பெற்ற போது, தென்னிந்திய நட்சத்திரம் சௌகார் ஜானகி விருதுகளை வழங் கினார். சிறந்த நடிகைக்கான விருதை சௌகாரிடமிருந்து இவர் பெற்றுக் கொண்டபோது, பரிசு வழங்கு பவர் சௌகார் ஜானகியா? பரிசைப் பெறுபவர் சௌகார் ஜானகியா? என பார்வையாளரிடத்தில் ஒரு சந்தேகம் உண்டாயிற்று. காரணம்... குமாரிரா ஜத்திற்கும், சௌகார் ஜானகிக்கும் அந்த அளவுக்கு உருவ ஒற்றுமை.

1975ம் ஆண்டு கலாசார அமைச்சின் தேசிய நாடக விழா நடைபெற்றபோது, சுய ஆக்கங்களில் சிகரம் தொட்ட ஆற்றுகையான "சிறுக்கியும், பொறுக் கியும்" நாடகத்திலும் பிராதான பாத்திரத்தில் குமாரிராஜமே நடித்தார். சிறந்த நடிகைக்கான விருதையும் பெற்றார். எனது இயக்கத்தில் இரண்டு முறை சிறந்த நடிகைக்கான விருதை பெற்றவர் மட்டுமல்ல, சிறந்த நடிப்பிற காக இரு தடவைகள் விருது பெற்றவ ரும் இவர்தான்.

நடிகவேள் லடீஸ்வீரமணி, இயக்குனர் சுஹைர் ஹமீத் போன்ற பிரபலங்களின் நாடகங்களிலும் தனது நடிப்பாற்றலை மேலும் செழுமைப்படுத்திக் கொண் டவர். நடித்தோம் முடித்தோம் என்ப தோடு நிற்காமல் ஒரு நாடக அரங்கே ற்றத்திற்கு தன்னால் எந்தளவு உதவி செய்ய முடியுமோ அந்தளவிற்கு ஒத்து ழைப்பு நல்குபவர்.

தனது இளமைக்காலத்திலே இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டதனால், கலைத்துறையில் நிரப்ப முடியாத ஒரு வெற்றிடம் ஏற்பட்டது.

நிரப்ப முடியாத வெற்றிடம் தான் இவரது நடிப்பாற்றலை நிரூபித்துக்கொண்டிருக் கிறது என்பது நீர்த்துப்போகாத நிஜம். குமாரிராஜம் எமது தலை முறையை பொருத்தவரையில் வரம். கலைத்துறை செய்ததவம்.

அந்த தவத்தை இத்தினத்தில் (மார்ச் 8) நினைத்துப் பார்ப்பதும் சர்வதேச மகளிர் தினத்திற்கு பெருமை சேர்ப்பதாகும்.


# UNIVERSAL
## PRINTERS

Quality Offset Printers, Graphic Art Designing, School Requirements, Estate Suppliers & Stationers

01, Upper Dumburugiri Road, Hatton.
27, city Plaza Complex, Hatton.
Tel :0512222911
universalhatton@ymail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்திரீகளும் வாக்குரிமையும்

- DR. நல்லம்மா

இலங்கை அரசியல் சீர்திருத்த விடயமாக டொனமூர் கமிஷனர்களால் வெளியிடப்பட்ட யாதாஸ்தை ஒவ்வொருவரும் நன்கு ஆராய்ந்திருப்பார்கள் இக்கமிஷனர்கள் இலங்கை வாழ் ஸ்திரீகள் சம்பந்தப்பட்டவரை நடத்தியிருக்கும்விதம் மிகவும் திருப்திகரமாகவே இருந்து வருகிறது. இலங்கை மாதர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்திய அக்கமிஷனர்களுக்கு நாம் நன்றி பாராட்டக்கடமைப்பட்டுள்ளோம். இச்சிறு தீவிலுள்ள ஸ்திரீகளாகிய நாம் இப்போதுதான் நமது உறக்கத்தினின்று விழித்து எழுந்து நமது உரிமைகளைப்பெற முயற்சி செய்கிறோம். இவ்வாறு நமது உரிமைகளைப் பெற முயற்சிப்பதைப்பல ஆடவர்கள் ஆதரித்த போதிலும், இலங்கை தேசிய காங்கிரஸ் சபையிலும் இலங்கைப் பெண்மணிகளுக்கு வாக்குரிமை அளிக்கப்பட வேண்டுமென்பது வற்புறுப்பட்ட போதிலும் இப்போது நாம் கையாண் டிருக்கும் காரியம் மிகச்சிறியதெனவே. நாம் வெளிப்படையாக கூறவேண்டியதாயிருக் கிறது. நாம் பெறவேண்டிய உரிமைகளை உன்னி ஆலோசிக்கும்போது இப்போது பெற முயற்சித்திருப்பது ஒரு தினையளவே ஒக்கும். இந்நாட்டிலிருக்கும் ஸ்திரீகளின் நிலைமையை ஒப்பிட்டுப்பார்ப்பதால் ஒரு பயனும் ஏற்பட்டுவிடாது. இந்தியாவிலுள்ள ஸ்திரீகளைக் காட்டிலும் நம் கல்வியில் தேர்ந்துவிட்டோம் என்று சொல்வதாவது நம் நாட்டு ஸ்திரீகளின் கல்வியை மற்ற நாட்டு ஸ்திரீகளின் கல்வி முன்னேற்றத்துடன் ஒப்பிடுவதாவது யாதொருபயனையும் அளிக்கப்போவதில்லை.

**1920 களில் இலங்கையில் வாழ்ந்த ஒரு தமிழ் பெண்ணின் அரசியல் வாக்குரிமை சிந்தனைகள்**

தற்போது நம் இலங்கையிலுள்ள ஸ்திரீகளின் நிலைமையையும் கமிஷனர்களால் நம்மவர்களில் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டிருப்பதையும் எவ்விதத்தும் நியாயமுறையாக பூராவாகப் பரிசீலனை செய்யவேண்டியதே இப்போது நம்முடைய கடமையாயிருக்கிறது. நாம் கேட்டதற்கு அதிகமாகவே கமிஷனர் நமக்கு உரிமை அளித்திருக்கிறார்கள் என்பதை நாம் ஞாபகத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டினோம். நம்மவர்கள் வாக்குரிமை பெறச்சிறிது கற்றவர்களாகவும், ஓர் சிறு தொகையை சம்பாதிப்பவர்களாகவோ அல்லது சொத்துடையவர்களாகவோ இருக்கவேண்டுமென்றும் அவ்வாறு உள்ளவர்களுக்கே வாக்குரிமை அளிக்க ப்பட்டால் அதுவே தகுந்ததெனவும் நாம் வேண்டிக்கொண்டோம்.

ஆனால் இத்தகைய நிபந்தனைகள் யாதொன்றையுமே லட்சியம் செய்யாது அவைகளை எல்லாம் அப்புறுப்படுத்திவிட்டு "ஓர் ஸ்திரீயானவள் வாக்குரிமைகளை உபயோகப்படுத்துவதற்கு முன்பு, அறிவு தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்." என்ற ஓர் நிபந்தனையை மட்டும் கமிஷனர்கள் கூறியிருக்கிறார்கள். ஆடவர்களுக்கு ஜன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தில் எவ்வளவு உரிமைகளுண்டோ அத்துணை சம உரிமைகள் பெண்டிர்களுக்குமிருப்பது இயற்கைதானே. இருதிறத்தாருக்கும் ஒரேதன்மை யானதிறமையும், அறிவுமுதிர்ச்சியும் இருந்து வருகின்றதையும் நாம் கண்கூரப்பார்த்து வருகிறோம்.

முதன்மையாக வாக்குரிமை என்பதென்னென்று ஆராய்வோம். வாக்குரிமை யெனப்படுவது சுவாதந்திரியம் அல்லது ஓர் அரசாங்கத்தாராலோ அல்லது ஓர் அரசாலோ அளிக்கப்படும் சுதந்திரத்துக்கே வாக்குரிமை என்பது. இதிலிருந்து நாட்டின் அரசியலைச்சரிவர நடத்துவதற்கு ஏற்படுத்தப்படும் பார்லிமெண்ட் சபைகளில் ஜனப்பிரதிநிதிகளை தெரிந்தனுப்ப உபயோகிக்கப்படும் உரிமைக்கே வாக்குரிமை எனக்கூறப்பட்டது. இலங்கை ஸ்திரீகளுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டுமென்பது அவர்கள் சட்டசபையில் பிரதிநிதிகளை தேர்ந்தனுப்பும் உரிமையை த்தான் பெறுவதெனப் பொருள்படும். ஓர் பிரதிநிதியை தெரிந்தெடுப்பதற்குள்ள உரிமையால் தேர்தலுக்கு நிற்கவேண்டிய நிபந்தனைகளையும் நிதானிக்க வேண்டிவருகிறது இது சம்பந்தப்பட்டவரை இலங்கையிலுள்ள முப்பது வயதிற்கு மேற்பட்ட எல்லா பெண்டிரும், அவர்களுக்கு கல்வியறிவு இருந்தாலும் சரி, பொருளிருந்தாலும் சரி, ஒன்றுமே இல்லாவிட்டாலும் சரி, யாதொரு வித்தியாச முமின்றி தமக்குரிய வாக்குரிமையை உபயோகிக்கப்பதிவு செய்துகொண்டு தமக்கு யாரிடத்தில் நம்பிக்கையிருக்கிறதோ அன்னாருக்கு தமது வாக்குரிமையைக் கொடுக்கலாம் எனக் கமிஷனர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

ஸ்திரீகள் சட்டசபையிலோ, அரசாங்கசபையிலோ அங்கத்தினராக விழைந்தார்க ளானால் ஆங்கிலக்கல்வி கற்றிருக்க வேண்டுமெனவும் வேறுயாதொரு நிபந்தனையும் தேவையில்லை எனவும் கமிஷனர்கள் சிபார்சு செய்துள்ளார்கள். ஆதலால் தேசிய உரிமையை அளிக்கும் விஷயத்தில் ஆடவர்க்கும், ஸ்திரீகளுக்கும் சரிசமத்துவமான முறையையே கமிஷனர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள். ஆனால் ஸ்திரீகளுக்கு வாக்குரிமை வயது நிர்ணயத்தை மட்டும் ஆடவர்க்குரிய வயதினின்றும் 9 வருடங்களை உயர்த்தியுள்ளார்கள். ஸ்திரீகள் தேசிய விஷயங்களில் பிரவேசித்ததினால் தமது சமூகவாழ்க்கையே நாசமடைந்து விடுகிறதென சிலர் நினைக்கிறார்கள். இது விடயத்தில் யாம் அதிகம் பேசவிரும்பவில்லையாயினும் இரண்டொருவார்த்தை கூற விரும்புகிறோம். தேசத்தின் பொதுஜன சேவையில் ஸ்திரீகள் ஈடுபட்டு வருவதினால் அவர்கள் தம்மில் வாழ்க்கையின் காரியங்களை ஒழுங்குபெற நடத்த யோக்கியதை அற்றவர்களாய் ஆகிவிடமாட்டார்களென்பது எமது அனுபவத்திலிருந்து அறிந்து கொண்டோம். அரசாங்கத்தின் நிர்வாகம் முழுவதையும் தேசத்தின் தேசிய கைங்கரியத்தையும் தனியாகத்தம்கைக்கொண்ட ஆடவர்கள் தம்மில் வாழ்க்கையைச் சரிவர நடத்த யோக்கியதையற்றவர்களாயிருக்கிறார்களா? அவர்கள் குழவிகளிடத்துக் கொண்டுள்ள அன்பு அறவே அற்றவர்களாயிருக்கிறார்களா? சமுதாய வாழ்க்கையின் சமாதானத்தையும், திருப்தியையும் பெறாதிருக்கிறார்களா? இல்லையே அதுபோது ஸ்திரீகளும் ஏன் பொதுஜன கைங்கரியத்தில் ஈடுபட அனுமதிக்கலாகாது? ஆங்கில அருங்கவியான ஷெல்லி என்பவர் சொன்னபடி "ஸ்திரீகர்களாகிய நாம் இல்வாழ்க்கையின் சுற்றத்தாருக்கும் வெளி உலகத்தாருக்கும் உண்மையாக நடந்து கொள்ளக்கூடும். அவ்வாறு உண்மையாக நடந்துகொள்ளவும் வேண்டும்"" என்பதை நாம் ஈண்டு குறிப்பிடவேண்டியதாயிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்திரீகளுக்கு வாக்குரிமை அளிக்கப்பட வேண்டிய அவசியமென்ன?. அதனைப்பெற்று அவர்கள் என்ன விசேஷ காரியங்கள் செய்யப்போகிறார்கள் என்பதாகப் பலர் கேட்கலாம். "சிசு சம்ரஷணைக்கும், இல்லங்களை சுத்தமாக வைத்துக்கொண்டிருப்பதற்கும் மருத்துவத்திற்கும் மற்றும் பல காரியங்களுக்கும் இலங்கையில் ஸ்திரீகளின் கைங்கரியம் மிகவும் மாண்புடைத்ததாகவும், பிரயோசனமுடையதாகவும் இருக்கிறது." எனக்கமிஷனர்களே தமது யதாஸ்தில் குறித்துள்ளார்கள். டொனமூர் கமிஷனர்கள் சரியான உண்மையை அறிந்து வெளியிட்டிருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். இவ்வருட ஆரம்பத்தில் எங்களுள் சிலர் கமிஷனர்களுக்கு முன் சாட்சியங் கொடுத்தபோது மேற்குறிக்கப்பட்டிருக்கும் விஷயங்களின் அவசியத்தையே வற்புறுத்தி எடுத்துக்கூறி அதன் காரணத்தினாலேயே எமக்கு வாக்குரிமை அளிக்கப்பட வேண்டுமென்று மன்றாடினோம். அதனால் கமிஷனர்கள் கவரப்பட்டு விட்டார்களென்றே கூறுவோம்.

உதாரணமாக இலங்கையில் ஏற்படும் சிசுமரண விகிதத்தை எடுத்துப்பார்க்கும்போது 1000 குழந்தைகளுக்கு 172 குழந்தைகள் சிசு பருவஞீத்திலேயே மரித்து விடுகின்றனவென்று 1925ஆம் வருஷ அறிக்கையினின்றும் தெரிய வருகிறது. 1924ம் வருஷமுதல் 1925ம் வருஷம் வரைக்கும் இங்கிலாந்திலும் வேல்ஷிலும் 1000த்துக்கும் 86 சிசு மரணங்களே ஏற்பட்டிருக்கின்றன. அத்துடன் இலங்கைச்சிசு மரணத்தை ஒப்பிட்டுப்பார்க்கும்போது இலங்கையில் இச்சிசுமரணத்தை நிறுத்துவதற்கென எவ்வளவு சீர்திருத்தம் செய்யப்பட வேண்டியிருக்கிறதென்பது விளங்கும். இவ்வாறு சிசுமரணம் ஏற்படுவதின் காரணத்தை ஆடவர் அறிவார்களா என்பதே கேள்வி. சிசுக்களின் சம்ரஷணையைக் கவனிக்கும் பொறுப்பு ஆடவர் குறித்ததோ அல்லது பெண்டிருக்குறித்ததோ என்பது இப்போதெழும் கேள்வி. நாம் இந்த இலங்கைத்தீவின் கண்ணமைந்த நடுத்தர ஜனங்களுடன் அளவளாவிப் பார்த்த வரையிலும் பத்துமாதம் பல துன்பப்பட்டுப் பெற்றெடுத்த குழந்தைகளைத் தாய்மார்கள் பிரிய நேரிடும் காஷி கண்டோர் மனதைக் கலைந்துறையும்படி செய்யத்தக்கதாயிருந்தது. இத்தகைய விஷயங்களை சீர்திருத்த சட்ட சபையில் யாவர் மன்றாடக்கூடும்?. இத்தகைய கண்காணாக்காஷிகளை அநுபவ பூர்வமாகக்கண்ட ஸ்திரிகளே தான் இங்கு பலர் மனதில் பதியுமாறும் எடுத்துக்கூற முடியும். ஆதலால் ஸ்திரிகளேதான் அத்தகைய குறைகளைச்சட்ட சபைகளில் எடுத்துப்பேசி நிவர்த்தி செய்ய இயலும்.

இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினையை எடுத்து ஆராய்வோமானால் அப்போதும் ஸ்திரிகளே தான் மிகவும் சங்கடப்படவேண்டி ஏற்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு விஷயத்தையும் ஊன்றிப் பார்க்குமிடத்து எத்துணையோ விடயங்கள் ஸ்திரீகளால் சட்ட சபைகளில் எடுத்துப்பேசி நாட்டை முன்னேற்றப்படுத்த வேண்டியதாக இருக்கிறது. கமிஷனர்கள் நமக்கு வாக்குரிமையை அளித்து விட்டார்களென்றும் அதனால் இனி நமக்கு வேண்டியது யாதொன்றுமில்லையெனவும் நாம் வாளாயிருந்துவிடக்கூடாது. இப்பொழுதுதான் நாம் தேசிய கைங்கரியத்தின் முதற்படியில் கால் வைத்திருக்கிறோம். கல்வியைப் பெற்றவர்களுக்கும், உலக அறிவு முதிர்ச்சி அடைந்தவர்களுக்கும் அந்த வாக்குரிமையின் மூலம் தேச சேவையின் உணர்வு ஏற்படும். வாக்குரிமை என்பது ஓர் வகைச் சுதந்திரம் எனச் சற்று முன்னம் கூறினோம். சுதந்திரத்துடன் பொறுப்பு வந்து சேர்வது இயற்கையன்றோ. நமக்கு எப்போது வாக்குரிமை கொடுக்கப்பட்டதோ அப்போதே நம்மிடம் ஓர்வகை நம்பிக்கை வைக்கப்பட்டிருக்கிறதென்றும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஆதலால் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வோர் தேசிய பிரச்சினைகளையும் தெறிவுறத்தெரிந்து அவைகளைக் கற்று முன்னேற்றத்தை அடைய முயற்சி செய்வதுடன் தேச சேவையையும் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம்.

"இலங்கைவாழ் மகளிர் வாக்குரிமைச் சங்கம்" என நாமம் படைத்து ஓர் சங்கம் சென்ற வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டதென்பதைப் பலரும் அறிந்திருப்பர். இச்சங்கம் மிகவும் சமயோஜிதமான காலத்திலேயே தோன்றியது என்று கொள்ளலாம். ஏனெனில் அந்நாட்களில்தானே இலங்கைச்சட்டதிருத்த விசாரணைகாரர், இவ்விடம் வந்திருந்தார்கள். அவர்கள் தேசமெங்கும்போய் ஆராய்ச்சி செய்து இலங்கைத்தீவின் அரசாங்கநிலை, ஜனசமூகநிலை எப்படிப்பட்டனவாயிருக்கின்றனவென்று அறிந்து கொண்டார்கள். இதற்காகவே அவர்கள் இலங்கை வாசிகள் பலரையுங்கண்டு பேசி அவர்கள் வாக்குமூலத்தை கேட்டறிந்தார்கள். இவைகளிலெல்லாம் ஆண்மக்கள் மாத்திரம் பங்குபெற்றார்களன்றிப் பெண்மக்கள் சிலகாலமாக யாதொருபங்கும் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனதுபற்றி, இலங்கையில் வசிக்கும் பெண்மக்கள் தங்களாலாகவேண்டிய காரியங்களையும் ஆண்மக்கள் பேரிலேயே போட்டுவிட்டு தன்தேசநன்மை கருதாது வேண்டாவெறுப்புடன் ஜீவித்துவருகிறார்களோ என்று இவ்விடம் வந்திருந்த சட்ட திருத்த விசாரணைக்காரர் எண்ணியிருக்கக்கூடும். ஆனால் பெண்களாகிய நாம் சமயம் கிடைக்கும் வரையும் காத்திருந்தோமேயன்றி வேறல்ல. ஆண்மக்களில் பலர் பெண்களுக்கு வாக்குரிமை கொடுப்பது புத்தியல்லவென்று பேசிக்கொள்கிறார்கள் என்று நாம் கேள்விப்பட்டபோது இதுதான் ஏற்றசமயமென்று கண்டு, பெண்கள் வாக்குரிமைச் சங்கம் ஒன்றை ஸ்தாபித்தோம். அதோடு நாம் நின்றுவிடவில்லை. சட்ட விசாரணைக்காரரை நாம் முகதாவில் கண்டு நமது தேச அரசாட்சியில் காணப்படும் பெரும் குறைவுகள் இவையென எடுத்துக்காட்டிப் பேசினோம். அவர்களும் தீர்க்கமாய் விசாரணை செய்து, நாங்கள் குறித்துக் காட்டினவைகள் யாவும் உண்மையேயென ஒப்புக்கொண்டனர். அதனால்தான், அவர்கள் பெண்களாகிய நமக்கு வாக்குரிமை கிடைக்கத்தான் வேண்டுமென்று சிபார்சு செய்வார்கள் என்ற நிச்சயம் மனதிலுண்டாயிற்று. நாம் காத்திருந்தபடியே சட்ட திருத்த விசாரணைக்காரர் "இலங்கை வாழ் மகளிருக்கு வாக்குரிமை கொடுக்கப்படவேண்டியது அவசியம்" என்பதாகத் தமது அறிக்கைப் பத்திரத்தில் வெளிப்படுத்தினர். நாம் கவலையற்று முயற்சியற்று சும்மாவிருந்ததினால் இவ்வுரிமை நமக்குக் கிடைக்கவில்லை. நாம் பிரயாசப்பட்டு வேலை செய்தோம். அதனாலேயே இதைப் பெற்றுக் கொண்டோம். என்றாலும் வாக்குரிமை 30 வயது துவங்கி அதற்கு மேற்பட்ட ஸ்திரீகளுக்கு மாத்திரம் கொடுக்கப்பட வேண்டுமென்பதாக சட்ட திருத்த விசாரணைக்காரர் குறிப்பிட்டனர். அப்படி எல்லைப்படுத்திக் கொள்வதினால் சற்று வயது குறைந்த அநேக ஆயிரக்கணக்கான பெண்கள் வாக்குரிமையைப் பெற்றுக்கொள்ளகூடாமற்போகிறது என நமது சங்கத்தார் கண்டும் சொற்பகாலத்துக்கு ஒப்புக்கொள்ளுவோமென முதல் நினைத்தார்கள். ஆனால் தற்கால நிலையைக் கவனிக்குமிடத்து 30 வயது வரும் வரைக்கும் பெண்கள் காத்திராமல் 21 வயதிலேயே வாக்குரிமையைப் பெற்றுக்கொள்வது அவசியம் என்பதாகக் கண்டனர். ஆனதால் இதையே பெற்றுக்கொள்வதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டுமென்பதே சங்கத்தின் தற்காலக் கொள்கை. ஆனால் இலங்கையில் வசிக்கும் பெண்கள் யாவரும் வாக்குரிமை என்றால் என்ன? அது நமக்கு கிடைக்க வேண்டுமென்று என்னத்துக்காக கேட்கிறோம், அது கிடைத்தால் நாம் அதை எவ்விதமாய் பிரயோகிக்கவேண்டும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைப்பற்றி அறிந்திருக்கிறார்கள், என்று நாம் சொல்வதற்கில்லை. எல்லா ஸ்திரீகளுக்கும் இவ்விஷயத்தைப்பற்றி அறிவூட்டவேண்டியது வாக்குரிமைச்சங்கத்தாரின் கடமையென நமக்குத் தோன்றியது. இதற்காக இங்கிலிஸ்பாஷையில் "மகளிரும் வாக்குரிமையும்" என ஒரு சிறு புத்தகத்தை பிரசுரஞ் செய்திருக்கின்றோம். இப்புத்தகம் சில நாட்களுக்குப்பின் தமிழிலும், சிங்களத்திலும் பிரசுரிக்கப்படும். இப்புத்தகத்தில் காணப்படும் சில விசேஷமான பகுதிகளை மொழிபெயர்த்து "இலங்கை இந்தியன்" பத்திரிகையை வாசிக்கும் பெண்மக்கள் அறிந்து கொள்ளும்படியாக இவ்விடம் தருவது நலமென எனக்கு காணப்பட்டது.

புத்தகத்தின் முதற்பாகத்தில் "வாக்குரிமை" என்றதின் அர்த்தம் இன்னதென்றும், பற்பல தேசங்களிலும் பெண்மக்கள் அதை எவ்விதம் அங்கீகரித்து வருகிறார்கள் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. வாக்குரிமையாவது என்ன? அது தேர்தல் காலத்தில் தேர்த்தல் சீட்டில் ஓ இவ்விதமாக ஓ அடையாளம் போடுவதற்குக் கிடைத்திருக்கும் உரித்தும் இவ்வடையாளத்தைத் தேர்தல் சீட்டில் ஒருவனாவது, ஒருத்தியாவது போட்டுவிட்டால் அச்சீட்டின் மூலமாய் அவன் அல்லது அவள் சட்ட நிருபணசபை ஆகிய இச்சபைகளில் தனது பிரதிநிதியைத் தெரிந்து கொள்ளுகிறதாயிருக்கும். இவ்விதமாய் வாக்குரிமைக்காரன்தன் மூலமாயும் தனது பிரதிநிதி மூலமாயும் தனது தேசத்தின் சட்ட திட்டங்களை ஒருவாறு ஒழுங்குப்படுத்திக் கொள்ளக்கூடிய சுதந்திரம் அடைகிறான். அது நகரவாசி, நாட்டுவாசி என்பவர்குரித்தாயுள்ள குறியாயும் ஒரு செய்கையாயும் இருக்கின்றது. தனி ஒரு ஆள் ஒருவன் "வாக்குரிமை" ஓர் பெரிய சுதந்திரம் எனக்கணிக்காமல் இருக்கக்கூடும். அப்படிப்பட்டவன் தனது வாக்குரிமையைப்பாவித்துத்தான் வேண்டும் என அவனைக் கட்டாயப்படுத் தவுமில்லை. அவன்மாத்திரம் தன் வாக்குரிமையைப் பாவிக்காவிட்டாலும் அது தேசத்துக்கு பெரும் கேட்டை உண்டாக்குவதுமில்லை. ஆனால் ஒரு வகுப்பாரோ அவர்கள் எல்லாரும் வாக்குரிமையைப் பாவிக்கும் சுதந்திரமற்றவராயிருப்பின் அது தேசத்துக்குப் பார நட்டத்துக்கு ஏதுவாயிருக்கும் என்பதற்கில்லை. எந்தெந்த தேசத்தில் வாக்குரிமைச்சுதந்திரம் ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்தந்த தேசங்களில் எல்லாம் ஜனங்கள் கல்வியிலும் சன்மார்க்கத்திலிலும் செல்வத்திலும் ஞானத்திலும் அதிகப்பட்டுக்கொண்டே வருகின்றனர் என்பதை தேச வர்த்தமானங்களை படித்துக்கொண்டுவரும் யாவரும் அறிவார்கள்.

மகளிர் முன்னேற்றத்துக்குத் திட்டமான மூலாதாரம் வாக்குரிமையெனச் சொல்லலாம். புருஷர்களுக்கு வாக்குரிமை கிடைத்திருக்கும் வண்ணமே சம நிலையாக மகளிருக்கும் வாக்குரிமை கிடைக்க வேண்டும். அது கிடைக்கும்வரைக்கும் ஸ்திரீகள் புருஷரைப்பார்க்கிலும் குறைவான நிலையிலேயே இருக்கவேண்டிவரும். அதன்நிமித்தமாய் அவர்கள் தன் தேசிய சம்பந்த விஷயங்களிலும் புருஷரைப்பார்க்கிலும் தாழ்ந்த இடத்தையே அடையவேண்டி நேரிடும். உலகத்தில் அநேக நேரங்களில் ஸ்திரிகள் தாழ்ந்த நிலை எனும் ஸ்திரி தற்காலத்தில் மாறிக்கொண்டே வருகிறது. இது சந்தோஷத்திற்கும் தைரியத்திற்கும் ஏதுவானது. வருஷங்கள் செல்ல செல்ல ஒரு நூற்றாண்டு கடந்து இன்னொரு நூற்றாண்டு ஆரம்பிக்க காலத்துக்கேற்ற கோலமாய் புதிதான விதி முறைகள் புதிதான நோக்கங்கள் புதிதான ஒழுக்கங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. இப்புதிய மாறுதல்களின் முக்கியமாய் நாம் கவனிக்கக்கூடியது ஸ்திரி ஜனங்கள் நிலையில் காணப்படும் மாறுதலேயாம். கல்வி பயிற்சியிலும் சீர்திருத்தத்திலும் குடி நிலையிரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்திரிகள் தற்காலத்தில் அதிகமாய் முன்னேறியிருக்கின்றனர். இற்றைக்கு இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் ஸ்திரிகளின் தேர்ச்சி இவ்விதமாயிருந்ததென்று நாம் சொல்ல முடியாது. சென்றுபோன நூற்றாண்டுகளில் பெண்கள் கல்வியென்றால் அதைப்பற்றி நகைப்போர் எத்தனை பேர்? தற்காலத்தில் பெண்கள் கல்வி கற்க வேண்டுமென்பதே பொது ஜனவாஞ்சையாயிருக்கிறது அவ்விதமே பெண் என்றால் பின்னே நிற்கவேண்டுமென்றார் சில வருஷங்களுக்கு முன் இப்போ பெண்களும் முன்னேறி வந்தால் தான் தேசத்துக்கு நன்மை என்று பெரும்பான்மையும் ஒத்துக்கொள்கிறார்கள். பெண்பாலாரின் வாக்குமூலம் வாக்குரிமையாகிய இவைகளைத் தற்காலத்தில் புறக்கணித்து நடக்கவே முடியாது. அவர்களும் ஒவ்வொரு தேசத்திலும் விசேஷ அம்சங்களெனக் கணிக்கப்பட்டு வருகிறார்கள். நாகரீகமடைந்திருக்கும் தேசங்களிலெல்லாம் பெண்பாலார்க்கு வாக்குரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு தேசத்தின் முன்னேற்றமாவது சாதியாரின் முன்னேற்றமாவது பூரணப்பட வேண்டுமாகில் ஸ்திரி ஜனங்களைப் பின்னே வைத்துக் காக்கிறதினால் நிறைவேறாது ஸ்திரிகள் எவ்வளவு அறிவிலும் நேர்மையிலும் அதிக-கப்படுகிறார்களோ அவ்வளவுக்குத் தேசமும் வளர்ந்தோங்கும் கல்விப் பயிற்சி அதிகப்பட சாதாரண ஜீவிய சுகாதார முறைகளைப்பற்றிய அறிவும் அதிகப்பட குடும்பங்கள் செழிக்கும். பிள்ளைகள் சுகம் பெலமடையோராய் வளர்க்கப்படுவார்கள். அதிலுஞ்சிறுவயதில் மரிப்போர் தொகையும் குறைந்துவிடும். மனித ஜாதியாரின் முழு தொகையில் அரைப்பங்கு ஸ்திரிகள் அவர்களும் மனிதஜாதியாருக்கு அத்தியாவச-யமானவர்கள். ஆகையால் எந்த ஜாதியாவது தனது பொதுஜன ஜீவியத்தில் ஸ்திரீயையும் பங்காளியாககச் சேர்த்துக்கொள்ளாவிட்டால் அந்த ஜாதி அறிவிலும், தேர்ச்சியிலும் மற்றெல்லா விஷயங்களிலும் குறைவடைந்திருக்குமேயன்றி வேறல்ல. ஓர் குடும்பத்தில் பிதாவும், மாதாவும் ஒரே மனதுடன் உழைத்தால்தான் அக்குடும்பத்தின் குறைவுகள் நீங்கி நிறைவுண்டாகும். அது போலவே தேசநன்மைக்கென்று புருஷரும் ஸ்திரீகளும் ஒருமித்து உழைத்து வந்தால் தான் ஒவ்வொறு தேசத்திலுள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்களும் செழிப்படையும்.

ஸ்திரீயானவள் தன்னுடைய குடும்ப விடயங்களில் மாத்திரம் கவனஞ்செலுத்தி தேசம் என்ன கேட்டு கெட்டாலும் தமக்கென்னவென்று சொல்லிக்கொண்டு காலங்கழிக்க முடியாது தமது தேசத்தினதும் நல்வாழ்க்கையையும் அவள் தனது இலக்காக்கிக்கொண்டு உழைக்க வேண்டியவளாயிருக்கிறாள். இவ்விதமாக பல தேசங்களில் பெண்பாலார் தேசியத்துக்கடுத்தான் பெரும் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு வேலைகளைச் செவ்வனே நடத்தி வருகிறார்கள் அப்படி ஸ்திரீகளும் தங்கள் பொறுப்பையேற்று வேலை செய்துவரும் தேசங்களில் எல்லாம் சீரடைந்து செழித்து வருகின்றன. இத்தேசங்களில் தற்கால நிலைமையைப்பார்த்து நமது தாய்த்தேசமாகிய இந்தியாவிலும் பர்மா, துருக்கி, ஆப்கானிஸ்தான் முதலான மற்றக் கீழ்தேசங்களிலும் மகளிர் முன்னேற்றம் தேசநன்மைக்கு முக்கியமான ஓர் எத்தனம் என்னும் ஜனங்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அதனாற்றான் இப்போ அத்தேசங்களில் ஸ்திரீகளுக்கு பல சலாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன துருக்கி, ஆப்கானிஸ்தான் முதலிய தேசங்களில் தானும் தற்காலத்தில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இத்தேசங்களை ஆளும் மன்னர் ஸ்திரீகளை வீட்டுக்குள்ளே அடைத்து வைப்பதும் அவர்கள் முக்காடிட்டுக் கொண்டேயிருக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்துவதும் பெரும் மூடத்தனமெனக் காட்டி அக்கொள்கைகளையகற்றி விட்டிருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமால்பாஷா என்னும் துருக்கி அரசர் சில மாதங்களுக்கு முன் அத்தேசத்தை ஓர் பிரஜாதிபத்திய நாடாக்கிவிட்டார். அப்பது அவர் செய்தவுடன் முதன் முதலாக அத்தேசப் பெண்களுக்குச் சுயாதீன நிலை கிடைக்கவேண்டுமென நிரூபித்தார். அப்படி அவர் செய்வதற்குக் காரணம் என்னவென்று விசாரித்தபோது பெண்பாலரை எந்தத்தேசம் அடக்கி வைத்து அடிமைகள் போல நடத்தி அவர்களுக்கு ஆண்களைப் போலவே சம சுதந்திரம் கொடுக்கப்பின் வாங்க நிற்கிறதோ அந்தத் தேசமானது உண்மையான சுயாதீனம் அடையக் காத்திருக்கவே கூடாது எனக் கூறினார்.

பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்படக்கூடாதென்பது பலருடைய அபிப்பிராயம் அவர்கள் இதுவிடயத்தில் அநேக ஆட்சேபனைகள் செய்திருக்கிறார்கள். அவை களில் முதலாவதாய் அவர்கள் சொல்லிக்கொண்டது "இலங்கைப்பெண்கள் வாக்குரிமை பெற்றுக்கொள்வதற்கு தகுதியான கல்விப்பயிற்சி உடையவாரா யிருக்கவில்லை" என்பது. இதனை மறுத்துக் கூறுவோம்.

நமது தாய் தேசமாகிய இந்தியாவில் 1921ம் வருஷம் சில மாகாணங்களில் ஸ்திரீகளுக்கு "வாக்குரிமை" சுதந்திரம் கிடைத்தது. அவ்வருஷத்தில் இந்தியாவில் எழுத வாசிக்கக்கூடிய ஸ்திரீகளின் தொகை நூற்றுக்கு 2 வீதம் மாத்திரம். அதை இலங்கையோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். 1921ம் வருஷத்தில் இலங்கைவாழ் ஸ்திரீகளில் எழுத வாசிக்கக்கூடியவர்கள் தொகை நூற்றுக்கு 21 வீதி. பெண்கல்வி வருஷா வருஷம் அதிகப்பட்டுவரும் இவ்விலங்கையில் இந்த வருஷத்தின் தொகையைப் பார்ப்போமானால் அது நூற்றுக்கு 25 வீதமாகிவிட்டது என்று சொல்லாம். இந்தியாவில் சர்வகலாசாலை பட்டதாரியாக ஆயிரக்கணக்கான பெண்மணிகளிருக்கின்றதென்பது வாஸ்தவமே. இலங்கைப் பெண்களில் பெரும்பான்மையோர் பட்டதாரிகளல்லர். ஆனால் பட்டதாரிகளானால் மாத்திரம் ஒருவர் வாக்குரிமையைப் பெறத்தகுதியு ள்ளவரென்பது ஒவ்வாது. சட்டசபை பிரதிநிதிகளாவோர் தானும் பட்டதாரிகளா யிருக்கவேண்டுமென்பது பிரதானமல்ல. பட்டதாரிகள் தங்கள் கல்வியறிவுக்கேற்ப தேசத்தாருக்காக விடாமுயற்சியுடன் வருந்தி உழைக்ககக்கூடியவராயிருக்கக்கூடும். பட்டதாரியல்லாதோர் ஜனநன்மைக்காக உழைப்பதில்லை என்பது அதில் அர்த்தமில்லை. ஆகவே சபைப் பிரதிநிதிக்கு கலாசாலை பட்டங்கள் அத்தியாவச- யமல்லாவிடில் பிரதிநிதியைத் தெரிந்தனுப்பும் தேசவாசிக்கு அது அவசியமன்று. அன்றியும் கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் படித்து அரங்கேறினவர்களே வாக்குரிமைக்குத் தகுந்தவரென நாம் கணிக்குமிடத்து இலங்கை வாசிகளாகிய எத்தனை ஆண் மக்கள் வாக்குரிமையைப் பெற்றுக்கொள்வார் என்று விசாரிப்பது நியாயமாகும் விசாரிக்குங்கால் தற்போது வாக்குரிமை பெற்றிருக்கும் ஆண்மக்களில் எட்டில் ஏழுபங்கு பெயரும் வாக்குரிமையற்றவர்களாவாரென்றும் சொல்லலாம்.

அரசாங்க ஒழுங்குகளுக்கு அடுத்த உரித்துகள் ஒருதேசத்தாருக்குக் கொடுக்கப்படும்போது. அத்தேசம் முழுவதும் அதையிட்டு சிலர் மாத்திரம் முன்னேறுவதைக் கவனிக்க வேண்டும். அதைவிட்டு சிலர் மாத்திரம் முன்னேறியிருந்தால் போதும் என்றுகொள்வது தவறு. சில வருஷங்களுக்கும் இலங்கையிலும் ஓர் சர்வகலாசாலை ஸ்தாபிக்கப்படும் என்று யாரும் எதிர் பார்த்திருக்கிறார்கள். அது ஸ்தாபனமான பிற்பாடு இலங்கையில் பெண்மணிகளும் தங்கள் இந்திய சகோதரிகளைப்போல் கலாசாலைகளில் கற்று அரங்கேறிப் பட்டதாரிகளாவார்களென்பது நிச்சயம். இலங்கையில் பெண்கள் கல்வி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறதென்பது வித்தியாதாரப் பகுதித்தலைவரின் அறிக்கைப் பத்திரத்தைப் பார்க்கும்போது தெளிவாக விளங்கும். அவ்வறிக்கைப் பத்திரத்தின் படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*19261927 வருடங்களிள் பாடசாலைகளில் கல்விகற்றுவரும் பெண்களின் தொகை 12,789 எனக்கணக்கிடப்பட்டிருக்கிறது. இதுபோதிய நியாயமாகும்.*

மேலும் 1928ம் வருஷத்தில் இலங்கையில் ஓர் புதுச்சட்டம் ஒன்று உண்டாக்கப்பட்டது அது விவாகஞ்செய்து கொண்ட ஸ்திரீகளின் காணி, பூமி, பொருள் இவைகளின் ஆட்சியைப் பற்றியதாகும். இச்சட்டம் உண்டாக்கப்படுமுன் விவாகமான ஸ்திரீகள் தானும் தங்கள் புருஷருடைய சம்மதமின்றி தங்கள் சொத்துக்களை விற்கவாவது வேறொருவருக்குச் கொடுக்கவாவது தனியாக ஆட்சி செய்யவாவது முடியாது மேற்கூறிய சட்டம், இந்த நிபந்தனைகளை எல்லாம் அகற்றிவிட்டு ஸ்திரீகள் தாங்களே தங்களிஷ்டப்படி காணி,பூமி சொத்துகளை வாங்கவும் விற்கவும் வரிகளைக்கட்டவும் ஆட்சிபண்ணவும் கூடும் என்பதாகத் தீர்த்துவிட்டது. காணி, பூமி பொருள் பண்டம் அவைகளை எல்லாம் ஆண்டு நடத்தி ஒழுங்குசெய்து கொள்ளத்தக்க வல்லபமும் யுக்தியும் ஸ்திரீகளுக்குண்டென்பதை சட்டம் ஒப்புக் கொள்ளுகின்றது. அப்படியிருக்க சட்டசபைப் பிரதிநிதிகளைத் தெரிந்து கொள்ளத்தக்க பகுத்தறிபும நேர்மையும் நமது தேசஸ்திரீகளில் காணப்படவில்லையென்று சொல்வது எவ்வளவு பத்தியீனம்.
வாக்குரிமை பெறுவதற்கு ஒவ்வொருவரும் எழுதவாசிக்கத்தக்கவராயிருக்க வேண்டும் என்னும் கொள்கையை டொனமூர் கமிஷனர்கள் அதாவது சட்டதிருத்த விசாரணைக்காரர் தங்கள் யாதாஸ்த்தில் எழுதி வைத்திருக்கின்றனர். அவர்கள் சொல்லுவதாவது

தேசத்தின் சட்டசபைகளுக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் விஷயத்தில் வாக்காளர் யாவரும் எழுதவாசிக்கத் தெரிந்தவர்களாய் தானிருக்க வேண்டுமென்று நாங்கள் கருதவில்லை இது அவசியமுமன்று அரசாட்சியானது பொது ஜனங்களுடைய பொறுப்பில் அமைத்து நடைபெறவேண்டுமாகில் யாதொரு வித்தியாசமுமின்றி ஜனங்கள் எல்லோரும் அதில் பங்கு பெருஞ்சிலாக்கி யத்தையடைய வேண்டும். பெரியோரென்றுஞ் சிறியோரென்றும் கல்விகற்றவர், கல்விகல்லாதவர் என்றும் ஆண்மக்கள் என்றும் பெண்மக்கள் என்றும் பிரித்துப் பேதமுண்டாக்குவது நீதியாகாது. அப்படிப் பிரிப்பது அநீதியென்று நமக்குக் தோன்றுகிறதனால் நாங்கள் வாக்குரிமையை ஜனங்களுக்குக் கொடுக்கும் விஷயத்தில் "கல்விகற்றோர் மாத்திரம் இதற்குரித்தானவர்" என்று கொள்வது நீதியல்ல, யுக்திமல்ல என்று கொள்வது நீதியல்ல, யுக்தியுமல்ல என்று சொல்லுகிறோம் என்பதே நமது தாய்தேசமாகிய இந்தியாவிலும் நாம் குடியேறியிருக்கும் தேசமாகிய இவ்விலங்கையிலும் தற்காலத்தில் பல ஜன சமூகங்களால் எதிர்த்துப் போராடப்பட்டு வரும் முக்கிய விஷயங்களில் ஒன்று மாதர் முன்னேற்றமேயாகும். முற்காலத்தில் நம்தேசமாதர்கள் தத்தம் இல்லங்களிலும் நகரங்களிலும் உத்தம செல்வாக்குள்ளவர்களாய் விளங்கி, தேசத்தைச் சிறப்பித்து நற்செய்கைகளின் பேருற்றாயும் நல்லறிவுக் களஞ்சியங்களாகவுமிருந்து வந்தார்களளென்பதை யாரும் அறிவர்.

காலஞ்செல்லச் செல்ல, அவர்கள் இத்தகைய நிலையில் இருந்து குறைவுபட்டதுமன்றி தத்தமது முன்னேற்றத்தையே முற்றும் மறந்துவிட்டனர். தங்களுடையவும் தங்கள் ஜாதி இனத்தவருடையவும் தேசத்தாருடையவும் செல்வம் வளர்ச்சி சிறப்பு சுதந்திரம், சக்தி, பணி செய்து கிடக்கும், சிலாக்கியம் ஆகிய இவைகளைப் பற்றிச் சிந்தித்து விசாரித்து அவைகளை நிவர்த்திக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணுதற்கேதுவான முயற்சி செய்து வருவது ஆண் மக்களின் கடமையே அற்றி பெண்மணிகளாகிய தமது கடமையும் சிலாக்கியமும் என்பதைச் சற்றேனும் சாதித்தாரல்லர்.

"மாதர்" என்னும் தமிழ் சொல்லுக்கு "தலைவியர்" என்பது அர்த்தமாகும். தலைவியாயிருந்தும் தமது செல்வாக்குள்ளடங்கி இருக்கும் இடங்கள் எவைகளோ அவ்விடயங்களில் சத்தியத்தை நாட்டி அன்பின் செங்கோல் செலுத்தி அணைத்து ஆதரித்து காத்து, இரைந்து நம்மவரை நற்பாதையில் நடத்தும் சுவீகாரத்தைப் பெற்றவராகிய நாம் நமது சக்தியை மறந்து கை சோர்ந்தவர் பொன்றிருப்பதற்குக் காரணம் யாது? பாரத்தையும் பழியையும் நமது குடும்பத்தலைவராயிருக்கும் ஆண்மக்களிற் சாற்றி விடுவோமா? அல்லது சாதியபிமானம் தேசாபிமானம் அதி-கரித்து ராஜீய தந்திரிகளாயும் தேசியவாதிகளாயுமிருந்து தேசத்தாரை நத்துவோராயுமிருக்கும் தேசகர்த்தாக்களின் மேல் போடுவோமா அல்லது நமது காருண்ணிய ராஜாங்கத்தாரிலும், சட்டசபை அங்கத்தவரிலுமுண்டென்று சொல்வோமா? அல்ல, அல்ல, நமது குன்றிய நிலைமைக்கு உதவிக்கருவிகளாய் அவர்கள் இருந்தார்கயேயன்றி மூலகாகாரணர்களாயிருந்தார்களென்று சாதிப்பது தவறாகும். உயர்ந்த ஸ்திரீயிலிருந்து தாழ்ந்த ஸ்திரீக்கு நாம் இறங்கிக் கொண்டே வருவதற்குக் காரண கர்த்தாக்கம் பெண்மணிகளாகிய நாமேயன்றி வேறுயாருமல்லர் என்று சொல்லத் துணிகிறோம்.

பெண்பிறப்பெடுத்தோராகிய நமக்கு நிகரற்ற செல்வமாகிய வசீகரத்தன்மையும், சாந்தத்துடனமைந்த சக்தியையும் சிருஷ்டி கர்த்தா கொடுத்திருக்கின்றார். இவ்விலட்சணங்களமைந்தோராய் நாமிருக்க வேண்டிய இயற்கைப்பிரமாணமாம். இதுபற்றியே நம்மைக் குடும்பப்பாதுகாவலராயும் சந்ததிகளையாதரிப்போராயும் இல்லங்களின் இறைவிகளாயும் சகல தேசத்தாரும் ஏற்றுக்கொண்டனர். "இல்லானகத்திருக்க, இல்லாததொன்றில்லை" என்றார் உலக ஞானியர். அதென்னவெனின் ஒரு வீட்டிலே உத்தமஸ்திரி இருப்பாளாயின், அவ்வீட்டிலே சகல சம்பத்தும் பாக்கியமுமே தங்கியிருக்குமன்றி, நிர்ப்பந்தமும் நிர்ப்பாக்கியமும் தங்கியிருக்காது என்பதேயாம்.

இப்படியிருக்க, தற்போது தமது குடும்பங்களிலும், கிராமங்களிலும் நாடு தேசங்களிலும் காணப்படும் காட்சிகள் என்ன? நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் கறையற்ற நெறியும் இடுக்கன்னற்ற ஜீவியமுமாயிருக்கிறதா?. அல்லவே, எங்கே பார்த்தாலும் அதர்மம், எங்கே பார்த்தாலும் கூக்குரல், சச்சரவு, கொடூரக்காட்சியதிகப்பட்டு வருகிறதே அன்றி குளிர்ந்த காட்சியைக் காணேமே. இவைகளைப் பெண்களாகிய நாம் கண்ணாரக் கண்டிருந்தும், அப்படிக்கண்டிராத பட்சத்தில் காதாரக் கேட்டிருந்தும் சற்றேனும் உணர்ச்சியாவது, கவலையாவது அற்றவராய் மெய்மறந்திருக்கி றோமல்லவா?. நாம் அன்பின் பணி செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டதல்லவா? அப்பணி செய்வதற்கேற்ற எத்தனங்கள் யாவும் தற்போது நமது கைவசமிரு க்கின்றனவா? நாம் வேண்டாவெறுப்புடன் அயர்ந்து போயிருக்கும் சமயத்தில் இவைகள் நாமறியாதவிதமாய் நம்மை விட்டு வழுவி அகன்று போயினவா? அப்படியா யின், நாம் இன்னும் அசதியாயிருப்பது நமது பிறப்புக்கும், சுதந்திரத்துக்கும் ஏற்றதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கையா?. அவைகளை ஆராய்ந்து, ஆலோசித்து நம்மிற் காணப்படும் குறைகளையும், சக்த்தியீனத்தையும், அகற்றி நாம் முன்னேறி வரவேண்டியது அத்தியாவசியமென நமக்குத்தோன்றவில்லையா? நமது தேசத்தாரின் தேய்வு நிலைமையும், அடிமைத்தனத்தையும் காண்கிறோமல்லவா?

அடக்கி நெருக்கி கீழ்மைப்படுத்தும் அடிமைத்தள ஸ்திதியிலிருந்தும் நீங்கி நமது தேசம் செழித்தோங்க வேண்டுமாகில் மாதராகிய நாம் முன்னேறிவந்து நமது கடமைகளைக்குறைவின்றி நிறைவேற்ற வேண்டியிருக்கிறதென்பதை அறிந்து கொள்வோமாக. ஒரு தேசமானது சுயாதீன நிலையடைந்து போற்றப்படத்தக்க செய்கைகளால் பேர் படைக்கவேண்டுமாகில், அத்தேசத்தின் குடும்பங்கள் ஒவ்வொன்றும், செவ்வனே நடைபெற்றுவரவேண்டும். நமது சந்ததியார் பெரியோரெனக் கணிக்கப்பட வேண்டுமாகில், நமது ஆண் மக்கள் தர்மந்தவறாநெறியினராயும் வலிமிகுந்த தைரிய புருஸராயும் பூவுலகத்தார் புகழும் புத்திசாலிகளாயும் இருக்க வேண்டுமாகில் நாம் கவனித்து பராமரிக்கவேண்டிய இடம் "குடும்பம்" ஆம் இதுவே, சாதி தேசம் என்னும் சங்கங்களுக்கு முளையாணியாகும். மானிட சன்மார்க்கமெல்லாவற்றிற்கும் குடும்பமே மூலாதார பராக்கிரமசாலியையும் ராஜ்ய தந்திரிகளையும் பிரசைகளையும் அறிவிற் பெருத்தோரையும் தேசபக்தர்களையும், மதபோதகர்களையும் உற்பத்தியாக்கி வளர்த்து அங்கங்கே அனுப்பிவைப்பது குடும்பமேயாகும். தேசத்தின் சக்தி சிறு சிறு வீடுகளிலிருந்தே உற்பத்தியாகின்றது. ஆகவே தேசத்தின் உன்னத நிலைக்கு தேவையாயிருப்பது உத்தம மாதராம்.

உத்தம மாதரை நாம் எப்படி உண்டாக்குவது? நாம் இழிவு நிலைக்கு வந்து விட்டோமே என்று கண்டு மனங்கசிந்து, நமது வர்க்கத்தாரை முற்றாயழித்து விட்டு புதிதான மாதர் கூட்டமொன்றை உண்டாக்குவோமென்று சொல்வதா? அது அசாத்தியமன்றோ? அதுவுமின்றி அது இயற்கைக்கு விரோதமானதாகுமல்லவோ? பெண்ணுடம்பெடுத்த நம்முடன் உடன் பிறந்த குணாதியங்களில் ஒன்றாவது நம்மை விட்டு முற்றாக அகன்று போய்விட்டதென்று நாம் சொல்லத்தகாது. பற்பல காரியங்களின் நியித்தமாய் அலை ஒழிந்து மறைந்து, மங்கி தேய்ந்து குற்றுயிருடன் காணப்படுகின்றன. இவைகள் முற்றும் அழிந்து விடாதபடி காப்பாற்றிக் கொள்வதற்கேற்றயத்தனங்களை நாம் கைக்கொண்டு அவசியம் முன்னேறிவரவேண்டியது. அவ்வெத்தனங்கள் யாவை?. நமது ஈடேற்றத்துக்கு வழிவகைகள் யாவை?. அவைகளில் சிலவற்றை இவ்விடம் கூறுவோம். இவ்வெத்தனங்களில் முதலிடம் பெற்று முக்கியமாய் விளங்கவேண்டியது தெய்வ பக்தியாம். லௌகீகசிந்தையே தலையெடுத்து தர்ம சந்தையை நிறுத்தி விடப்பார்த்து தானே விசேஷம் போலக் காட்டி கொண்டிருக்கும். இந்த கலியுகத்தில் பெண்மணிகளாகிய நம்மில் துலாம்பரமாய்த் தோற்றப்பட வேண்டிய இலட்சணமிதுவேயென்று தைரியத்துடன் சொல்லுவோம். தெய்வபக்தியற்ற பெண்ணானவள் தனக்கும் தன்னைச்சேர்ந்த யாவருக்கும் பெருங்கேட்டையும், இழிவையும் வருவிப்பாளென்பது திண்ணம். தெய்வ பக்தியற்ற பெண்ணுருவை நாம் மனோபாவனையிலாகிலும் கனவிலாகிலும் காணாமலிருப்பது நன்று. தெய்வநேசமற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதா, தன் கற்பத்தின் கனிகளாகிய அரும்பெரும்குழந்தைகளுக்கும் எவ்விதமாக சன்மார்க்க போதனையைப் புகட்டுவாள்? அவள் தனது பிள்ளையை வளர்க்குஞ்சலாக்கியத்தைப் பெறாதிருப்பது நல்லது. சன்மார்க்கப் புருஷர் தெய்வ பக்தியுள்ள மாதர்மாராலேயே உண்டாக்கப்பட வேண்டும். நமது மதக்கொள்கைகளும், போதனைகளும், சாதனைகளும், சடங்கா சாரங்களும் எவைகளோ அவைகளில் நன்மையானவைகளைக் கொண்டு நமது, சிருஷ்டி கர்த்தாவை நேசித்துப் பூசித்து, அன்பின் பணி செய்து ஆசியடைவோமாக.

இரண்டாவது எத்தனமாக நமது சுய பாஷைக்கல்வியைக் குறிப்போம். கல்வியென்ற விசாலித்த பெயரைக் கொடுப்பதினால், முதலாவதாக மேலைத் தேசப்பாஷைகளைக் கற்றுத் தேறுவதே சிறந்த கல்வியென நம்மவரிலனேகர் நினைத்துக் கொள்ளுகிறார்கள். தனது தாய்ப்பாஷையையறியாமலிருந்துக்கொண்டு அன்னிநி பாஷைகளின் பெருமையைப் பற்றி பேசுவதில் பிரயோசனமென்ன? எமது பாஷையாகிய தமிழ் மொழியில் இருக்கும் நூல்கள் எவ்விதமானவை? அவைகளிற் புதைந்து கிடக்கும் அறிவுத் திரவியங்கள் எண்ணுக்கடங்காதவை? அவைகளின் இனிமையையும் அழகையும் பெருமையையும் யாரால் சொல்ல முடியும்? இந்நூல்கள் ஒவ்வொன்றும் கல்விக் கழகங்கள் அன்றோ? தன் வீட்டில் நெல் ஏராளமாய் கட்டி இருக்க அயலவர் வீட்டில் அரிசி இரக்கப் போனவள் சீலமாய் அல்லவோ நமது நிலைமை இருக்கிறது. நமது சுய பாஷையில் கல்வித் தேர்ச்சியையே இலக்காக்கி நாம் அதற்கென்று அதிக உற்சாகத்துடன் உழைக்க வேண்டுமென்று மிக ஆவலுடன் கேட்டுக் கொள்கிறோம். இல்லற ஒழுக்கம், சாதியாசாரம், தேசத்தின் பழக்க வழக்கங்கள் நமது தேசத்தாரின் முற்கால மகிமைப்பெற்ற நிலை, பண்டைக்கால பெண்களின் நேர்மை, கற்பு, மந்திரித்துவம், ஆகிய இவைகள் ஒவ்வொன்றையும் தமிழ் பாஷை கற்றுக்கொண்டாலன்றி நாம் பூரணமாய் அறிந்து கொள்வது அரிது. பவளமாலை கொடிபோல எத்தனை உதாரணங்கள் நமக்கு முன் தோன்றுகின்றன. இவைகளைப் பார்த்து ஆனந்த பரவசம் அடையாது அந்நியர் கழுத்தில் காணும் மாலைகளையன்றோ நாம் கவருகின்றோம். நமது ஞானக் கண்கள் திறக்கப்படவும், நமது பாஷையின் சிறப்பை நாமே உணர்ந்துக்கொள்ளவும் அதன் தேர்ச்சிக்காகவும் என்ன செய்ய வேண்டுமோ அதை செய்யவும் நாம் தீர்மானம் பண்ணிக் கொள்ளுவோமாக.

மூன்றாவது எத்தனமாக பிறர் நேசம் என்னும் புண்ணிய குணத்தையும் அணிகலமாகக் கொள்ளுவோம். இதற்கு முதற் கூறியிருக்கும் எத்தனங்களும் நம்மிடம் இருக்குமானால் மூன்றாவதாகிய பிறர் நேசம் தானே தோன்றி வளரும். பிறர் நேசமின்றி தன்னய விருப்புள்ளோராய் நாம் இருக்கும் பட்சத்தில் அன்புடன் பணி செய்து கிடப்பது, முடியாத காரியமாகும். தன்னிடத்தில் இருக்கும் அரும் பெரும் திரவ-ங்கள் எவைகளோ அவைகளை எல்லாம் பூலோக வாசிகள் யாவர்க்கும் அள்ளி வீசி அவர்கள் வாழ்வைப்பார்த்து, ஆனந்தமடையும் தயாள சீவியல்லவோ பாரத மாதா? பாரத பூமியில் பிறந்த நாம் உலோபிகளாய் வாழ்வது நியாயமா? நம்மை மறந்து பிறர் நன்மைக்கும் முன்னேற்றத்துக்குமென நம்மையையே தத்தம் செய்து உத்தம ஊழியராய் நாம் உழைத்து வருவோமாயின் நாம் முன்னேற்றம் அடைந்து நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்திற்கும் பெரும் பெரும் நன்மைகள் உண்டாவதற்கேற்ற நற்பாத்திரங்களாய் விளங்குவோம் என்பது நிச்சயமே நிச்சம்.

நான்காவதாக நமது தேசத்தின் தற்கால உண்மை நிலை எப்படிப்பட்டது என்பதைப்பற்றிய தீர்க்க அறிவு நம்மிடத்தில் காணப்படவேண்டும். "அறியாமையே, ஆனந்தமாயிருக்க அறிவு தேடுவது மடமை"" என்று இங்கிலீஸில் ஒரு முதுமொழி உண்டு. இம்முதுமொழியையே நமது நியாயமாகக் கொண்டு சீவியம் நடத்துபவர் போல நாம் காணப்படுகின்றோம். ஒவ்வொரு வீட்டுத்தலைவியும் தன் தன் குடும்பமாது பெருத்துப் பெருகி, சிறப்புச் சீராக தழைத்தோங்கி வாழ வேண்டுமென்று விரும்புகிறான் அல்லவா? வாழும் வீடு, காண்போர் பலரும் சந்தோசத்தை உண்டாக்குவது இயற்கை. அது ஓர் கண்ணுக்கு இனிமையான காட்சி. அப்படிப்பட்ட வீடொன்று யாதொரு பிரயாசையும் அன்றி தானே உண்டாகுமா? ஆகாது வீட்டுத் தலைவியானவள் நுன்னிய கூர்மையுடன் தனது வீட்டின் நிலபரங்களை யாவையும் ஆராய்ந்து அறிந்துக்கொண்டு அதற்கேற்றபடி தன் வீட்டுக்காரியங்களை கவனமாக நடத்தி வந்தால்தான், அப்படி இல்லாமல் அவள் நிர்விசாரியாய், முழு மூடத்தனமுள்ளவள் போல, தன் மனம் போனபடி குடும்பம் நடத்த எத்தனிப்பாளாகில் அது ஆனந்தக் காட்சியல்ல, அகோரமான காட்சியையே உண்டாக்கும். அதுபோலவே நமது தேசிய சீவியத்திலும் காண்கிறோம். தற்காலத்தில் நமது தேசத்தின் நிலைமை எப்படிப்பட்டதாய் இருக்கிறதென்று பெண்களாகிய நாம் விசாரித்து அறிந்துக் கொள்ள முயற்சிக்கின்றோமா? ஊரிலுள்ளோர் யாவரும் யாதொரு குறைவின்றி உண்டு, உடுத்து மனரம்மியமாய் வாழ்ந்து வருகின்றார்களா? நம்மவாகிய அநேகர் வசித்து வரும் சிறு சிறு குடிசைகளிலெல்லாம் சுகாதார விதிகளுக்கு ஏற்ற விதமாய் கட்டப்பட்டு இருக்கின்றனவா? அன்றாடம் தத்தம் சீவியத்துக்கு என்று காலை துவக்கம் மாலை வரையும் இளைப்பாற்றின்றி வருந்தி உழைத்து வரும் இலட்சக்கணக்கான கூலி சனங்களின் கதி எவ்விதமாய் இருக்கிறது? நமது பட்டணங்களின் தெருக்களிலும் திண்ணைகளிலும் சந்துகளிலும் முடுக்கு மூலைகளிலும் ஓடித் திரிந்து விளையாடிக்கொண்டு இருக்கும் சிறு பாலராகிய ஆண் பெண் குழந்தைகளின் அலங்கோலத்தை ஆதரவற்ற ஸ்திரீயையும் பற்றி அறிவோமா?. இவைகளைப்பற்றி நாம் எப்போதாவதாவது கரிசனையுடன் விசாரணை செய்ததுண்டா?

"கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்" நாய் வாழ்ந்தால் என்ன? பூனை மாய்ந்தால் என்ன? ஊரிலுள்ளோர் எக்கேடும் கெட்டும் கெட்டுப் போகட்டுமே, என் குடும்பம், என் வீடு, என் வாழ்வு சரியாய் இருந்தால் போதாதா? பிறர் காரியங்களைப் பற்றி நமக்கென்ன தொல்லை, என்பதாக நாம் நமக்குள்ளே சொல்லிக்கொண்டு கண்ணை மூடிச்சும்மா இருப்பது தர்மமா?

நம்மில் எவராவது தனக்கென்று மாத்திரமே சீவித்திருப்பது கூடாத காரியம். ஓர் சரீரத்தின் ஓர் அங்கமானது அச்சரீரத்தின் இன்னோர் அங்கத்துடன் சார்ந்து பொருந்தியிருக்கிறது. அவ்வங்கத்தில் ஒன்று நோய்வடையும்போது மற்றோர் அங்கமும் அனுதாபப்பட்டு அதோடு சேர்ந்து நோவை உணர்ந்துக்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விதமே ஒவ்வொரு கூட்டத்தார், ஒவ்வொரு கிராமம் நோயினாலேயோ, அல்லது பஞ்சத்தினாலேயோ வருந்தும்போது அது அயல் குடும்பத்தையும், அயல் கூட்டத்தாரையும், அயல் கிராமத்தாரையும் தாக்காமல் இருக்கவே மாட்டாது. ஆகையால் பிறருடைய நன்மை தீமையோ வாழ்வு தாழ்வோ, சுக துக்கங்களோ, இவையெல்லாம் நமக்கும் பங்காகும். இப்படி இருப்பதனால் நாம் நம்மயகலத்தவரின் நிலைமை எப்படி என்று அறிந்து அவர்கள் குறைகளைத் தீர்க்கப் பார்ப்பது நற்செய்கையாகும். பிறருடைய கஷ்டங்களைப் பார்த்து இரக்கமடைவது தெய்வ லட்சணமாம். அவ்வித லட்சணம் நம்மில் காணப்பட வேண்டும். இதைக் குறித்தே தாயுமானவர்

"எவ்வுயிருமென்னுயிர் போலெண்ணியிரங்கவுநின்
தெய்வவருட்கருணை செய்வாய் பராபரமே"
என்றும்,

**நல்லம்மா மருத்துவம் பயின்ற இந்திய பெண்மணி. தம்மைபோல மருத்துவ துறையில் பணியாற்றும் பெண்கள் மேற்கத்திய நாடுகளில் ஆற்றுகின்ற சமூக பணிகளை அவர் நன்கு அறிந்து வைத்திருந்தார்.**

எல்லாரு மின்புற்றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"
என்றும் பாடியிருக்கிறார்.

நமது கிராமத்திலும் நாட்டிலும் தேசத்திலும் என்னென்ன சம்பவங்கள் நடந்தேறுகிறது எவ்வகையாக, சீர்த்திருத்தம் அறிவு என்பவை அதிகரித்து வருகின்றன. எவ்விதமாய் சட்ட திட்டங்கள் கையாளப்படுகின்றன என்பதாக நாம் ஆராய்ச்சி செய்து அறிந்து கொள்ள வேண்டும். நமது தேசத்தில் எவ்விதமான நாகரீகம் மேலிட்டுத் தலையுயர்த்திக் கொண்டு வருகிறதென்பதை நாம் கவனித்ததுண்டா? நமது தாய்த் தேசத்துக்கு ஆதிகாலமுதல், சுதந்திரமாகியுள்ள உன்னத சன்மார்க்கமும், உத்தம தர்மசிந்தையும் பொருந்திய நாகரீகமா, நமது தேசத்திற் தற்போது காணப்படுகிறது. இல்லேயே முந்தாநேற்றுப் பெய்த மழைக்கு நேற்று முளைத்த காளான் போலக் காணப்படும் மேல் நாட்டு நாகரீகமல்லவோ தலையெடுக்கப் பார்க்கின்றது. நம்மையறியாமலே, இது வளர்ந்து வளர்ந்து வந்து நமது நற் சீவியத்தை நாசம் பண்ணுகிறது.

காரியமிப்படியிருக்க, கீழைத்தேசத்தாராகிய நாம் முன்னேறி வருவதெப்படி? நாம், கண்களைத் திறந்து, நமது நிலையைச் சீர்படுத்த வேண்டிய காலம் வந்து விட்டது. உலகத்தின் நானா திசைகளிலுமுள்ள பெண்கள், தத்தம் தேச உயர்ச்சி, தாய்மாராகிய நம்மிலே அதிகமாய்த்தங்கியிருக்கிறதென்பதை மறந்து விடாதிருப்போமாக. நாம் உயர்ந்தால், நமது தேசமும் உயரும். இதுவே முறையாகையால் இதையே நமது இலக்காகக்கொண்டு, நாம் ஜாக்கிரதையுடன் முயற்சி செய்வது அவசியமென நமக்குத் தோன்றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய மக்கள் குடும்பமாக, சமுதாயமாக வாழத்தொடங்கிய காலகட்டத்தில் ஆண்களும், பெண்களும் சமமாகவே வாழ்ந்து வந்துள்ளனர். காலப்போக்கில் அதிகாரமமதை கொண்ட மனப்பான்மை உடையவராக ஆண்கள், பெண்களைப் போகப் பொருட்களாகக் கருதி அவர்களைத் தொடர்ந்தும் தங்களது ஆதிக்கத்தின் கீழ் கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ள முயன்று அவ்வாறே செயற்பட்டனர். இதனால் நமது சமுதாயத்தில் ஒரு முரண்பாடு தோன்றலாயிற்று.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலம் காதலையும் வீரத்தையும் முன்னிலைப்படுத்திய போது அக்காலத்தில் வாழ்ந்த பெண்கள் மதிப்புக்குரியவர்களாகவே வாழ்ந்துள்ளார்கள். மன்னர் உடன்வரும் வாட்போரைச் சென்று பார்ப்பது, குதிரையேற்றம் போன்ற விளையாட்டுக்களைப் பார்வையிடுவது போன்றவற்றிலும் பெண்கள் சுதந்திரமாகப் பங்குகொண்டார்கள். தான் விரும்பியவனைக் காதலிப்பது, அவனைக் களவாகச் சந்தித்து உரையாடுவது என்பன எல்லாம் அக்கால இலக்கியங்கள் வாயிலாகப் பெண்களைப் பற்றி நாம் அறிந்த உண்மைகள். இலக்கியங்கள் சமுதாயத்தைப் பிரதிபலிப்பதாகவே அமைவதால், அன்றைய இலக்கியங்களை நோக்குமிடத்து பெண்கள் எவ்வித சிறப்புடன் வாழ்ந்திருப்பார்கள் என்பதை உணர்ந்து கொள்ளமுடியும்.

"தமிழக வரலாற்றின் இடைக்காலத்தை இருண்ட காலம் என்று கூறலாம். வாழ்க்கையில் வழுக்கி விழுந்த சமயவாதிகள், 'சேலை கட்டிய மாதரை நம்பாதே', 'பெண் மாயை', 'பெண்புத்தி பின்புத்தி' என்று போதித்தனர். அவர்கள் கட்டியளந்த கதைகளால் சமய உலகில் பெண்களின் நிலை தாழ்ந்தது. மற்றைய துறைகளில் அவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட இந்தக் கருத்துக்கள் துணைபோயின" என்று தமிழக ஆய்வாளர் முனைவர் மா. பா. குருசாமி ஒரு கட்டுரையில் தெரிவித்திருந்தார்.

சமுதாய வாழ்க்கையில், ஒரு மனிதனின் போக வாழ்க்கைக்கு வேண்டிய செல்வங்களுள் ஒன்றாகப் பெண்ணும் சேர்க்கப்பட்டாள். மற்றைய பொருட்களோடு பெண்களையும் சேர்த்துத் தானம் கொடுக்கும் வழக்கம் இருந்தது. "வாழ்க்கைத்துணை நலமாக" என்று வள்ளுவர் காலத்தில் மதிக்கப்பெற்ற பெண் "கன்னிகாதானமாக" மாற்றப்பட்ட அவலநிலை நடைமுறையாயிற்று. சீதனமாகக் கொண்டுவரும் பொருள் அவளோடு சேர்ந்து கணவனின் உடைமையாயிற்று. "ஈன்று புறந்தருதல் எந்தலைக்கு கடனே" என்று ஏற்றுக்கொண்ட பெண்கள் பிள்ளைகளைப் பெற்றுத்தரும் இயந்திரங்களாக மாறிப்போனது காலத்தின் கொடுமையாயிற்று. மேலும் வீட்டு வேலைகள் யாவற்றையும் தனியே செய்ய வேண்டிய பரிதாபநிலைக்குத் தள்ளப்பட்டனர். பெண்களுக்கு ஏற்பட்டுள்ள அவலநிலையைக் கண்டு பொங்கி எழுந்த பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியும், பாவேந்தர் பாரதிதாசனும் தத்தமது முற்போக்கான கொள்கைகளை முன்னிலைப்படுத்தி கவிதைகளைத் தந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்வுற்று, விடுதலை தவறிக்கெட்டு விலங்குகளாய் வாழ்ந்த பெண்களின் எழுச்சிக்காக தமது நாட்டுத் தலைவர்கள் விடுதலை இயக்கத்தைத் தொடங்கிய காலத்தில் பாரதியாரின் குரல் ஓங்கி ஒலித்தது.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்றுரைத்த பாரதியைத் தொடர்ந்து வந்த பாவேந்தர் பாரதிதாசன் பெண்களின் விடுதலைக்கு முரசு கெட்டினார். தமிழ்க் கவிஞர்களில் முதன்மைப்படுத்தப்பட்டு நிற்கின்ற, புரட்சிக்கு வித்திட்ட மகாகவி பாரதியும், பாவேந்தர் பாரதிதாசனும் வெறும் உணர்ச்சிகளின் அடிப்படையில் மட்டும் பெண்கள் முன்னேற்றம் பற்றிக் கவிதைகள் எழுதவில்லை பெண்கள் அடிமைகளாக, புலன்களற்ற பேதைகளாக வைத்திருக்கும் சமுதாயத்தை எண்ணிப்பார்த்து பெண்களின் விடுதலைக்காகவும் மேம்பாட்டிற்காகவும் பாடுபட்டனர். "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக" இந்திய நாட்டிலும், உலகிலும் வாழுகின்ற வரை, இந்த இலட்சியத்துக்காகப் போராடுகின்றவர்களுக்குக் கவிஞர்கள் இருவரினதும் கருத்துக்கள் உற்சாகமளித்து, உயிரூட்டி வழிகாட்டுவனவாக அமைந்துள்ளன. இவர்கள் வாழ்ந்த காலத்தில் பெண்களின் வாழ்க்கை நிலை இன்றிருப்பதைவிடவும் மிகவும் தாழ்வானதாகவும், கேவலமானதாகவும் இருந்தது. அதனால்தான் இவர்கள் நெஞ்சுபொறுக்காமல் பெண்ணினத்தின் எழுச்சியை க்காணப் பொங்கி எழுந்தனர். பாரதி தனது "முரசு" என்ற கவிதையிலே பெண்களைப் பற்றிக் கூறியதை இப்படியாகக் காணவைக்கிறது.

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக் குள்ளேசில மூடர் - நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்."
பெண்கள் விடுதலைக்கும்மியில் ......

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக் குள்ளே பெண்ணை பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்."

என்று எடுத்தியம்பியுள்ளார்.

மனித வாழ்க்கையில் சரிபாதியாக, வாழ்க்கையின் பங்காளியாக இணை நலன்களாக இருக்க வேண்டிய பெண்களைச் சமுதாயக்கொடுமைகளுக்கு ஆளாக்கி, அடிமைகளாக, ஏவலர்களாக, சுயசிந்தனையற்றவர்களாக வைத்திருப்பதனால் ஏற்பட்டுவிட்ட இழப்புகளை இரு பெருங்கவிஞர்களும் அருமையாகச் சுட்டிக் காட்டுகின்றனர். பெண்களைத் தாழ்நிலையில் வைத்திருந்தால் அவர்களிடமிருந்து உயரிய மனித குலம் தோன்றுவதற்கு இடமில்லை என்பதை பாரதியார்........

"நிலத்தின் தன்மை பயிர்க்குளதாகுமாம்
நீசத் தொண்டும் மடமையும் கொண்டதாய்
தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலவே யரிதாவதோர் செய்தியாம்"
என்று கருத்துடனான செய்தியை முன்வைக்கிறார்.

பெண் விடுதலையைக் கூறவந்த பாரதியார் பின்வருமாறு செப்புகின்றார்.

"விடுத லைக்கு மகளிரெல் லோரும்
வேட்கை கொண்டனம் வெல்லுவம் என்றே
திடம னத்தின் மதுக்கிண்ண மீது
சேர்ந்து நாம்பிர திக்கினை செய்வோம்
உடைய வளசக்தி ஆண்பெண் ணிரண்டும்
ஒருநி கர்செய் துரிமை சமைத்தாள்
இடையிலேபட்ட கீழ்நிலை கண்டீர்
இதற்கு நாமொருப் பட்டிருப் போமோ?" என்கிறார்.

பெண் அடிமை நீங்கவேண்டும் என்பதற்காகப் பல ஆவேசமான கவிதைகளைப் படைத்த மகாகவி பாரதியார் பெண்விடுதலையை நோக்கி "பாஞ்சாலி சபதம்" என்னும் காவியத்தையும் படைத்துள்ளார். சூதாட்டத்தில் தருமன் திரௌபதியை வைத்துத் தோற்றுவிட்டான். "திரௌபதி தன் உரிமையை நிலைநிறுத்த பின்வருமாறு கேட்கிறாள்.

"நாயகர் தாந்தம்மைத் தோற்றபின் - என்னை
நல்கும் உரிமை அவர்க்கில்லை"
என்ற வரிகளின் ஊடாகப் பெண் தனது உரிமையைத் துணிந்து சொல்கிறாள்.

புரட்சிக்கவி, பாவேந்தர் பாரதிதாசன் தனக்கேயுரிய பாணியில் பெண்ணடிமைத் தனத்தின் விளைவுகளை பின்வருமாறு எடுத்துக் கூறுகின்றார்.

"பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம்என் கின்றீரோ?
மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ, பெண்ணினத்தை
பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே,
ஊமை என்று பெண்ணை உரைக்குமட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலைமைதான் ஆடவர்க்கும் உண்டு
புலனற்ற பேதையாய்ப் பெண்ணைச் செய்தால் அந்
நிலம் விளைந்த பைங்கூழ் நிலைமையும் அம்மட்டே"
மனித இனம் உணர்ந்து செயற்பட வேண்டிய கருத்துக்களை முன் வைத்துள்ளார்.

எமது சமுதாயம் பெண்களுக்கு "கற்பு" என்னும் பூட்டைப் பூட்டி அவர்களை அடக்கிவைக்க முயல்வதனை பாரதியார் ஏற்கவில்லை. கற்பின் பெயரால் வீட்டுக்குள் பெண்ணைச் சிறைவைக்கும் மடைமையினை அவர் எதிர்த்து "புதுமைப் பெண்ணின்" மூலம் தமது கருதுக்களை வெளிப்படுத்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குலத்து மாதர்க்குக் கற்பியல் பாகுமாம்
கொடுமை செய்தும் அறிவை யழித்துமந்
நலத்தைக் காக்க விரும்புதல் தீமையாம்"

கற்போடு இணைத்து அவர்காலத்தில் நிலவிய "கட்டாயத் திருமணம்" பற்றியும் எடுத்தக்கூறத் தவறவில்லை. தாம் வாழ்ந்த சமுதாயத்தின் கண் பெண்களுக்கிழைக்கின்ற மடமைகளையும் கொடுமைகளையும் சுட்டிக்காட்டுகின்றார் பாரதியார்.

"கற்பு நிலையென்றுசொல்ல வந்தார் - இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத் திப்பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்."

இக் கவிதையின் மூலம் பாரதியாரின் கருத்துநிலை எவ்வாறிருந்துள்ளது என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வாழ்ந்த காலத்தில் குழந்தைத் திருமணத்தின் கொடுமை மிகுந்திருந்தது. தம் மனக் கொதிப்பினை.... வயதான ஆணுக்கு இளம் வயதுப் பெண்ணைக் கட்டிவைப்பதை "மூடத்திருமணம்" என்று இடித்துரைக்கின்றார்.

"மண்ணாய்ப் போக மண்ணாய்ப் போக
மனம்பொருந் தாமணம் மண்ணாய்ப் போக!
சமூகச் சட்டமே! சமூக வழக்கமே!
நீங்கள், மக்கள் அனைவரும் ஏங்கா திருக்க
மண்ணாய்ப் போகவே!"

எவ்வளவு தூரத்திற்கு மனம் பொருந்தா மணத்தை வெறுக்கின்றார் என்பதை எம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

கணவனை இழந்த பெண்ணை சமுதாயம் கைம்பெண், விதவை என்று ஒதுக்கி வாழாவெட்டியாக்கிவிட்ட சமூக அமைப்பைச் சாடுகின்றார். மனைவி இறந்தபின் கணவன் மறுமணம் செய்து கொள்வது இயல்பாக இருப்பதைப் போன்று, கணவனை இழந்த பெண்ணும் திருமணம் செய்து வாழ்தல் இயல்பாகவே இருக்க வேண்டும் என்று பாவேந்தர் எண்ணுகிறார்.

"கைம்மை எனக்கூறி - அப்பெரும்.
கையினிற் கூர்வேலால்
நம்மினப் பெண்ணினத்தின் - இதய
நடுவிற் பாய்ச்சுகின்றோம்

என்று தனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெண்ணுக்கு நீதி" என்ற பாரதிதாசனின் கவிதை கல்யாணமாகாத பெண்ணுக்குக் கூறும் அறிவுரையாக அமைந்துள்ளது.

"வல்லமை பேசியுன் வீட்டில் - பெண்
வாங்கவே வந்திடு வார்கள்சில பேர்கள்......
சுற்றத்திலே முதியோர்கள் - இவர்
சொற்படி உன்னைத் தொலைத்திடப் பார்ப்பார்,

கற்றவளே ஒன்று சொல்வேன் - உன்
கண்ணைக் கருத்தைக் கவர்ந்தவன் நாதன்"

என்று கூறுவது சிந்தனைக்குரிய செயற்பாடு.

புரட்சிக்கு வித்திட்ட மகாகவி பாரதியாரும், பாவேந்தர் பாரதிதாசனும் எல்லோரும் இன்புற்று வாழ்கின்ற, சமுதாய நீதி நிலவுகின்ற புதியதொரு சமத்துவ சமுதாயத்தைக் காண விரும்பினர். அப்படியான சமுதாயத்தில் பெண்கள் ஆண்களுக்கு ஈடாகவும், இணையாகவும் வாழவேண்டுமென்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளனர்.

"வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று பேசவந்த பெண்ணழகே"

என்கிறார் பாரதிதாசன்.

பாவேந்தர் பாரதிதாசன் இன்னுமொரு கவிதையில் இப்படியாகப் பெண்ணின் பெருமையைக் கூறுகின்றார்.

"மூடத் தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடு மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே
வேண்டாத சாதிஇருட்டு வெளுப்பதற்குத்
தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி
புண்ணிற் சரம் விடுக்கும் பொய்ம் மதத்தின் கூட்டத்தைக்
கண்ணிற் கனல்சிந்திக் கட்டழிக்க வந்தவளே
எல்லாம் கடவுள் செயல் என்று துடை நடுங்கும்
பொல்லாங்கு தீர்த்துப் புதுமைசெய வந்தவளே"

ஒடுக்கி அடக்கப்பட்ட பெண்களின் எழுச்சிக்காக குரல் கொடுத்த இரு மகாகவிகளும் வரலாற்றில் முகிழ்ந்து நிற்கின்றார்கள்.

"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடலியற்றலின் எழுகோலங்கள்

-பேராசிரியர் சபா. ஜெயராசா

"ஆடலியற்றலியல்" (CHOREOGRAPHY) என்ற செயற்பாடு தமிழ்மரபில் மீளாய்வுக்கு ரியதா கின்றது. மரபுவழி முகிழ்ந்த பரதநாட்டியம் என்பது மீறமுடியாத வரையறைகளுக்கு உட்பட்ட செயற்பாடு. அடைவுகளும் முத்திரைகளும் திட்ட வட்டமான வரையறைகளுக்கு உட்பட்டவை. "சஞ்சாரி பாவம்" என்பது கற்பனைகளுக்கு இடமளித்தாலும் அங்கும் பரதநாட்டிய வரையறைகளை மீறிச் செயற்பட முடியாது. இவ்வாறான இடர்ப்பாடுகளின் எழுபுலத்திலேதான் ஆடலியற்றலியல் அழகியல் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது.

புத்தாக்க மலர்ச்சியுடன் ஆடலை உருவாக்கும் கலையே ஆடலியற்றியலாகிறது. பொருத்தமான அசைவுக் கோலங்களைச் சேகரித்தலும், ஒழுங்கமைத்தலும் ஆக்கச் செயற்பாட்டில் இடம் பெறுகின்றன.

எழுத்தாளர்கள், ஓவியர்கள், இசையமைப்பாளர்கள் போன்று ஆடலியற்றுனரும் அவர்களால் உருவாக்கப்படும் படைப்புக்களுக்கு ஆசிரியராகும் உரிமையைப் பெறு கின்றனர். அந்தப் படைப்புக்கள் அவர்களுக்குரிய தனித்தவமான உரிமை நிலையைப் பெறுகின்றன. சமகாலத்தைய மேலைப்புலத்து அரங்க ஆடல்கள் அனைத்தும் ஆடல் இயற்றுனரால் ஆக்கப்பட்டவையாகும்.

பரதநாட்டியத்திலே புதிய உருப்படிகளைத் தெரிவு செய்து அவற்றுக்குரிய ஆடலை வடிவமைக்கின்றனர். அவ்வாறு செய்யும் பொழுது பரதநாட்டிய மரபுக்கு உட்பட்டே மேற்கொள்ளப்படுகின்றது. மரபுவழியாக உருவாக்கப்பட்ட அடைவுகளையும், முத்திரைகளையும் தெரிந்தெடுத்து இணைத்தலே அங்கு மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் அவ்வாறான வரையறைகளையும் மீறிய எண்ணக் கருவாக ஆடல் இயற்றலியல் என்பது மேலைப்புலத்தில் விளங்குவதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

காலங்காலமாக ஆடல்கள் கையளிக்கப்பட்டுவரும் பொழுது அவற்றிடையே திரிபுகள் ஏற்பட்டு சிலவகையான புதிய எழுகோலங்கள் அல்லது பாணிகள் உருவாக்கம் பெறலாம். அவ்வாறான பகுதிநிலை மாற்றம் (யுசுவுஜயுடு ஊர்யுபேநு) என்பது குறித்த ஆடலின் அடிப்படைகளைமீறி எழுதல் இல்லை. அரிசோனாவின் வடபகுதியிலே வாழும் கோபி இந்தியர் (HOPI INDIANS) என்ற பழங் குடியினர் அவ்வாறு மாற்றங்கள் செய்வோரின் செயற்பாடுகளை ஏற்றுக் கொள்வதில்லை. பரத நாட்டிய மரபிலும் புதிய முத்திரைகளோ அல்லது அடைவுகளோ ஏற்றுக்கொள்ளப்படுதல் இல்லை. மேலைப்புலத்து ஆடலியற்றுனர் பொதுவாகப் புதியவகைகளை உருவாக்கும் கற்பனைகளை முன்னெ டுக்கின்றனர். உடலசைவுகளின் புதிய நீட்சிகள் பற்றிச் சிந்திக் கின்றனர். பழைய மரபுகளில் மாற்றங்களையும் மீள் அதிர்ச்சிகளை உருவாக்குகின்றனர். வேறுபட்டகளங்கள், தளங்கள், ஆடை அணிகலன், இசை மற்றும் கருவிகளின் உட்புகுத்தல்களை முன்னெ டுக்கின்றனர். அசையும் தளத்தில் ஆடலை நிகழ்த்துதல், ஊர்ந்து செல்லும் பொருள்களின் மேலிருந்து ஆடுதல் போன்றவை அவர்களின் ஆடல் இயற்றலியலில் முன்னெ டுக்கப்படுகின்றன. அவற்றை அடியொற்றி "ஆடலியற்றற் கற்பனை" என்ற அழகியல் எண்ணக்கருவும் உருவாக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுக் காலங்களிலே ஆடலியற்றியலிலே சிலதில்லுமுல்லுகளும் இடம்பெற்றன. கூட்டுச் செயற்பாடுகள் சிதைந்து தனியுரிமை வளர்ச்சியடைந்தமையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குரிய அடிப்படைக் காரணமாயிற்று. 14ஆம் 15ஆம் நூற்றாண்டுகளிலே இத்தாலிய அரச அவையிலிருந்த ஆடல் ஆசிரியர்கள் மரபுவழி ஆடல்களிலே சிலமாற்றங்களைச் செய்துவிட்டு தம்மாலேதான் அது உருவாக்கப்பட்டன என்ற ஆடல் ஆவணங்களை வெளியிட்டனர்.

மேலைநாடுகளில் இன்று ஆடலியற்றுவோர் தமது உளக் கோலங்களுக்கும், மனவெழுச்சிகளுக்கும் ஏற்றவாறு புதிய புதிய ஆடற் கோலங்களை உருவாக்குவதிலே தீவிர முனைப்புடன் செயற்படுகின்றனர். தமது உள்ளத்திலே தோற்றம் பெறும் எழுகாட்சிகளை அடியொற்றி புதுவகையான அசைவுகளையும் படிமங்களையும் உருவாக்கு கின்றனர். ஏற்கனவே பழக்கப்பட்ட அசைவுகளில் இருந்தும் முத்திரைக ளிலிருந்தும் விடுதலை காணலை முக்கியப்படுத்துகின்றனர்.

அவர்களாற் கூர்ந்த கவனம் செலுத்தப்படும் ஒரு துறையாக "ஆடல் தொடர்" (PHARASE) விளங்குகின்றது. உடல் வலு நீட்சியில் உருவாக்கப்படும் அசைவுகளின் தொடர்ச்சி "ஆடல் தொடர்" என்று பொதுவாகக் குறிப்பிடப்படும். ஆடல் தொடருக்குத் தொடக்கமும் முடிவும் உண்டு. ஒருவகையிலே பரதநாட்டியத்திலே குறிப்பிடப்படும் கோர்வைக்கும் (கோவை) இந்த எண்ணக்கருவுக்கும் தொடர்பு உண்டு. ஆடல் தொடரிலே ஒரு தருக்கநிலை இணைப்பானது அசைவுகளிலே காணப்படும். ஆனால் எழுந்தமான நிலை அசைவுகளிலே அவ்வாறான ஒரு தருக்க இணைப்பைப் பொதுவாகக் காணமுடியாது. உடல்விசையும் கால அளவும் ஆடல் தொடரிலே திட்டமிட்டு அமைக்கப்படும்.

ஆடல் தொடர் மீள மீள ஒப்புவிக்கப்படும் பொழுது அவற்றிலே பொருத்தமான மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் ஆடல் இயற்றுனர் உருவாக்கிக்காட்டுவர். யாழ்ப்பாணத்துக் கிராமிய ஆடல்களில் அவ்வாறான செயற்பாட்டைப் "புதுச் செருகல்" என அண்ணாவிமார் குறிப்பிடுவர்.

ஆடல் என்பது எளிமையான அசைவுகளில் இருந்து நன்கு வடிவமைக்கப்பட்ட வரன்முறைப்பாடுகளுக்கு உட்பட்ட அசைவுகள் வரை வளர்ந்து செல்லும் தற்காலத்து இராணுவ அணி நடைஅசைவுகள் கூட ஆடலின் காற்கோலங்களில் இருந்து எடுக்கப்பட்டவை என்ற கருத்து உண்டு. விளையாட்டுக்களின்போது நிகழ்த்தப்படும் உடலசைவுகளிலும், தன்னிலை வெளிப்பாடு, மனவெழுச்சிக் கோலங்கள் அழகியற்பண்பு முதலியவை காணப்படுவதால், ஆடலையும் விளையாட்டு உடற்கோலங்களையும் வேறுபடுத்துதல் கடினம் என்ற கருத்து ஆடல் இயற்றுனர்களிடத்துக் காணப்படுகின்றது. நுண்ணிதான முறையில் அவற்றுக்கிடையேயுள்ள வேறுபாடுகளைக் கூறுவதனால் விளையாட்டுக்களின் அசைவுகள் வெற்றியின் அடைவுகளை நோக்கி நிகழ்த்தப்படும். ஆனால் ஆடலின் அசைவுகள் அழகியல் நோக்கில் நிகழ்த்தப்படும்.

ஆனால் மேற்குறிப்பிட்ட வேறுபடுத்தலும் பிரச்சினையை எதிர்கொள்கின்றது. ஏனெனில் சமகாலத்தைய பனிச்சறுக்கல் விளையாட்டில் அழகியற்பண்புக்கு முன்னுரிமையளிக்கப்படுதல் குறிப்பிடத்தக்கது.

மேலைப்புலத்து ஆடல் இயற்றுனர்களிடமும் காணப்படும் ஒரு சிறப்பியல்பு தீவிரமான திறனாய்வு அணுகுமுறையினைக் கொண்டிருத்தலாகும். இந்திய மரபில் நடன ஆசிரியர்கள் தம்முன்னோர் வகுத்த ஆடற்கோலங்களை எதுவித திறனாய்வுமின்றிப் பின்பற்றும் அறிகை மரபைக் கொண்டுள்ளனர். மரபுகளைத் திறனாய்வு செய்தல் கலைக்கு இழைக்கப்படும் துரோகமாகக் கருதுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைப்புலத்துக் கல்வியினூடே வளர்ச்சியுற்ற திறனாய்வு மரபு அனைத்துத் துறைகளிலும் விரைவில் பரந்துள்ளது. விஞ்ஞானக் கோட்பாடுகளிலே காணப்பட்ட "பொய்யுரைப்பை"க் (FALCIFICATION) கண்டறிதலினால் அறிவியல் விரைந்து வளர்ச்சியுற்றமை குறிப்பிடத்தக்கது. பெரும் அங்கீகரிப்புக்கு உட்பட்ட "பலே" ஆடல்களில் இடம்பெற்ற அழகியல் ஆட்சியை மேலைப்புலத்து ஆடல் இயற்றுனர் திறனாய்வுக்கு உட்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. அந்தச் செவ்வியல் ஆடல் தொடர்பாக அவர்கள் முன்வைத்த முக்கியமான திறனாய்வுக் கருத்துக்கள் வருமாறு.

அ. அங்கு ஆடல் இடம்பெறவில்லை. மாறாக வெற்று நிலைச் சாகசங்களே (ACROBA TICS) இடம் பெற்றிருந்தமை.
ஆ. தனியொரு ஆட்டக்காரரின் திறன்களுக்கே அங்கு முக்கியத்துவமும் குவிப்பும் வழங்கப்பட்டிருந்தமை.
இ. குறித்துரைக்கப்படும் கருத்தையோ மனவெழுச்சியினையோ வெளிப்படுத்துவதற்கு அவை தவறிவிடுகின்றன.

செழுமையும் செம்மையும் பெற்றுச் செவ்வியல் நிலையில் மேலெழுந்த பலே ஆடலை மேலைப்புலத்து ஆடல் இயற்றுனர் திறனாய்வுக்குட்படுத்தி அதன் மட்டுப்பாடுகளை வெளியிட்டமை உலக ஆடல் வரலாற்றில் நிகழ்ந்த ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். திறனாய்வை மேற்கொள்ளலும், மட்டுப்பாடுகளை வெளிக்கொண்டுவருதலும் என்ற ஆடல் இயற்றுனரின் செயற்பாடுகள் நவீன ஆடல் வகைகளை உருவாக்குவதற்கு விசையும் பலமும் வழங்கின.

அந்தவகையில் உருவாக்கம் பெற்ற ஓர் ஆடல் வடிவமே அவன்காட் (AVANT GARDE) என்ற ஆடல் வடிவமாகும். அதனோடிணைந்த பல புதிய வடிவங்களும் பிரவாகமெடுத்து வருகின்றன.

ஆடல் தொடர்பான ஒரு பிரதான கருத்து மோதல் மேலைப்புலத்து ஆடல் இயற்றுனரிடத்து இன்று நிலவி வருகின்றது. வெளியீட்டு எழுகை (நுஓீசுநுளுளுஐழுே) என்பதை அடியொற்றிக் கருத்து மோதல் நிகழ்கின்றது. ஒருசாரார் ஆடலின் மரபு வழியான வரன்முறைப்படுத்தப்பட்ட கட்டமைப்புக்கும், ஆடல் திறன்களுக்கும் அதன்வழி நிகழும் நாடக ஆக்கத்துக்கும் முதன்மை வழங்குகின்றனர். அதனை மறுப்போர் வரன்முறைகள் முக்கியமல்ல என்றும் ஆடலின் வழியாகக் கையளிக்கப்படும் மனவெழுச்சிகளும் உணர்ச்சிகளும், எடுத்துரைப்பு வினைச் செயல்களுமே (NARATIVE ACTIONS) முக்கியமெனவும் வலியுறுத்துகின்றனர்.

உலகப் புகழ்மிக்க ஆடல் இயற்றுனரும் ரூசிய நாட்டைச் சேர்ந்தவருமான மிசேல் பொக்கின் ஆடலின் எடுத்துரைப்பு வினைச்செயல்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். மரபும் வரன்முறைப்பாடும் என்ற குறுகிய வட்டத்திலிருந்து ஆடல் வெளிவரவேண்டும் என்ற கருத்தை "பலே" ஆடலை முன்னிறுத்தி அவர் வெளியிட்டார்.

சிறு பிள்ளைத்தனமான கற்பனைகளும் மிகவும் செயற்கையான வரன்முறை வெளியீட்டுக் கட்டமைப்பும் செவ்வியற் பண்பு கொண்ட பலே ஆடலிலே காணப்படுதலை நவீன ஆடல் இயற்றுனராகிய மர்தா கிரகாம் சுட்டிக்காட்டியுள்ளார். நவீன உலகின் சிக்கல்களையும் ஒடுக்குமுறைகளையும் போர்வடுக்களையும் உளவியல் நெருடல்களையும், கூர்ப்பிடும் மனவெழுச்சிகளையும் காட்டுவதற்கு மரபு வழியான பழைய ஆடல் வரன்முறைப்பாடு ஈடுகொடுக்கமாட்டாது என்பது அவரின் பலத்த ஒலிப்பாகவுள்ளது.

அந்நிலையிலே பழமையான செவ்வியல் ஆடல்கள் தொல் பொருட்காட்சியகத்தப் பொருள்களாக மாறிவிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் சிங்கம்



ஆண்டுதோறும் மார்ச் 8 ஆம் திகதி [illegible] பெண்கள் தினமாக [illegible]

ஜெர்மனியில் [illegible] 1857 ஜூலை 5ஆம் திகதி கிளாரா பிறந்தார் [illegible]

1870 [illegible]

[illegible]

கிளாரா [illegible]

[illegible] 1889 இல் [illegible]

[illegible]

[illegible] 1907 [illegible] மார்ச் 8 ஆம் திகதியை [illegible] 1908 மார்ச் 8ஆம் நாள் ஆண்டுதோறும் சர்வதேச பெண்கள் தினமாக [illegible]

[illegible]

[illegible] 1933 [illegible] 30 [illegible] கிளாரா ஜெட்கின் 1933 ஜூன் மாதம் 20 திகதி [illegible] கிளாரா ஜெட்கின் [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தின் முதற் பெண்மணி



மலையகத்திலும் பல அமைப்புகள் இந்தச் சர்வதேச பெண்கள் தினத்தைக் கொண்டாடுவார்கள். ஆனால் மலையக மக்களுக்காக குரல் கொடுத்த முதல் பெண்மணியை நினைவு கூற மறந்துவிடுகிறார்கள். இன்றைய இளந் தலைமுறைக்கு திருமதி மீனாட்சி அம்மையார் யார் என்று தெரியாது. அவர்களுக்கு மாத்திரமல்ல... நமது மலையகத்து தலைமைகளுக்கே இவரைப் பற்றித் தெரியாது. ஏனெனில் படிக்காத தலைமை நம்மத்தியில் இருக்கும்வரை இதே நிலைமைதான்.

இலங்கையில் புகழ்பூத்த பெண்மணிகளில் ஒருவர் திருமதி மீனாட்சி அம்மையார். மலையகத்தின் முதல் தொழிற்சங்க அமைப்பைத் தோற்றுவித் தவரும், இலங்கையின் சுதந்திர பத்திரிகையாளருமான கோ.நடேசய்யரின் துணைவியாவார். திருமதி மீனாட்சி அம் மையார் தனது கணவருடன் இணைந்து தொழிற்சங்க, பத்திரிகை அரசியல் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

"கூட்டமிருக்குது ஏட்டிலே நம்முடன் சக்தியிருக்குது கூட்டிலே பட்டமிருக்குது வெள்ளைக்காரருடன் உருக்குது நெஞ்சந்தனிலே வேலையிருக்குது நாட்டிலே உங்கள் வினையிருக்குது வீட்டிலே........"

என்று மீனாட்சி அம்மையார் பாடிய தொழிலாளர் சட்டக்கும்மியைக் கேட்டு மெய்மறக்காதவர் யாருமில்லை. அது மாத்திரமில்லை மகாகவி பாரதியாரின் பாடல்களை மலையகமெங்கும் பாடிப் பரப்பிய பெருமைக்குரியவர் மீனாட்சி அம்மையார். தோட்டம் தோட்டமாகச் சென்று மீனாட்சி அம்மையார் பாரதியார் பாடல்களை பாட அதன் பின்னர் கோ.நடேசய்யர் பிரசங்கம் செய்வார். திருமதி மீனாட்சி அம்மையார் பாடுவதில் மாத்திரமல்ல பாடல்கள் எழுதுவதிலும் வல்லவர். இவர் எழுதிய பாடல் தொகுப்பு "இந்தியர்களது இலங்கை வாழ்க்கை நிலைமை" என்ற பெயரில் 1947இல் வெளிவந்துள்ளது.

கோ.நடேசய்யர் நடத்திய தேசபக்தன் பத்திரிகை 1929ஆம் ஆண்டு தினசரியாக வெளிவர ஆரம்பித்தது. நடேசய்யர் தொழிற்சங்க பணிகளுக்காக அடிக்கடி வெளியூர் சென்றுவிடுவதால் "தேசபக்தன்" பத்திரிகை அச்சிடும் பொறுப்பை மீனாட்சி அம்மையாரே ஏற்றார்.

தேசபக்தன் பத்திரிகைகளில் மீனாட்சி அம்மையார் நிறைய எழுதினார். ஆசிரியர் தலையங்கங்கள் கூட எழுதியுள்ளார். "ஸ்திரீ பக்கம்" என்று பெண்களுக்காக பத்திரிகைகளில் ஒரு பக்கத்தை ஒதுக்கி அதே பொறுப்பாக இருந்து பெண்களின் விடுதலைக்காகப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.

"இலங்கையில் இந்தியர்களுக்காக அநீதிகள் இழைக்கப்படுமானால் அந்த அநீதிக்கு எதிராகப் போராடும் போராளிகளின் முன் வரிசையில் திருமதி மீனாட்சி அம்மையாரைக் காணலாம்" எனக் கலாநிதி என்.எம்.பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இந்தியர்களை ஆதரித்து அவர்களின் உரிமைக்காக 1935ஆம் ஆண்டு மே மாதம் 27ம் திகதி பம்பலப்பிட்டி சுதர்சன் கோவில் முன்றலில் ஒரு கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்தில் கோ.நடேசய்யர், ஜி.ஜி.பொன்னம்பலம், ஏ.அஸீஸ், டாக்டர்.பெரேரா ஆகியோருடன் மீனாட்சி அம்மாள் காரசாரமாக கருத்துக்களை தெரிவித்துள்ளார். இது பற்றி மறுநாள் வீரகேசரி பத்திரிகை முக்கியத்துவம் கொடுத்துச் செய்திகளைப் பிரசுரித்தது.

மீனாட்சி அம்மையார் எழுதுவதிலும் பேசுவதிலும் மட்டும் வல்லவராக விளங்கவில்லை. எதனையும் செயற்படுத்துவதில் தீவிரமாக இருந்துள்ளார்.

மகாகவி பாரதியாரின் பாடல்களில் அதிக ஈடுபாடு கொண்ட மீனாட்சி அம் மையார் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக வாழ்ந்து காட்டியுள்ளார்.

மலையகப் பெண்களின் முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர் மீனாட்சி அம்மாள். அவரை ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச பெண்கள் தினத்தில் மலையக மக்கள் நினைவு கூற வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JIFFRRY'Z GEM

DESIGNED FOR GENERATION

No. 19,
Duplication Road, Colombo -04, Sri Lanka (Opp. House of fashion)
Tel : 0112559595
E-mail : info@jiffrryzgem.com
Web : www.jiffrryzgem.com



JIFFRRY'Z GEM
DESIGNED FOR GENERATION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org